மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 21 செவ்வாய்க்கிழமை (05.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 230

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

## சார்க் செலவை ஈடு செய்ய புதிய 3 வரிகள் அறிமுகம்

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சார்க் மாநாட்டுக்கு வீண் செலவு செய்த அரசாங்கம் புதிய வரிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதனை நிவர்த்திக்கப் பார்க்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும் கண்டி மாவட்ட எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுற்றாடல் பாதுகாப்புக்கான வரிகள் என மக்களின் மீது சுமத்தியிருக்கும் வாகன, கையடக்கத் தொலைபேசி மற்றும் மின்சாரம் தொடர்பிலான மூன்று வரிகளும் நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கும் விடயமாகும்.

அரசாங்கத்தின் இந்த நடைமுறையை ஐக்கிய தேசியக் கட்சி *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## பாலமோட்டையில் மோதல் ஒன்பது இராணுவத்தினர் பலி

### விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வவுனியா மாவட்டத்தில் பாலமோட்டையில் முன்னகர்வை மேற்கொண்ட படையினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய முறியடிப்புத் தாக்குதலில் 9 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

பாலமோட்டையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் படையினர் மேற்கொண்ட பெருமெடுப்பிலான முன்னகர்வை முறியடிக்கும் தாக்குதலை விடுதலைப்புலிகள் தீவிரமாக மேற்கொண்ட வண்ணம் உள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் *(12 ஆம் பக்கம் பார்க்க)*

# வடக்கில் பல பகுதிகளில் மோதல்


# 10 இராணுவத்தினர்; 36 புலிகள் பலி

## என்கிறது பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

**யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் மணலாறு போன்ற பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் முழுவதும் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இம் மோதல்களின்போது படைத் தரப்பைச் சேர்ந்த 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் புலிகள் தரப்பில் 36 பேர் பலியாகியுள்ளனர்.** ***(12 ஆம் பக்கம் பார்க்க)***

## நல்லூர்க் கந்தனின் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் நாளை ஆரம்பம்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறும் திருவிழாவில் 15 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 23 ஆம் திகதி கார்த்திகைத் திருவிழாவும் நடைபெறும். 25 ஆம் திகதி கைலாச வாகனம், 28 ஆம் திகதி சப்பறம், 29 ஆம் திகதி தேர்த் திருவிழா, 30 ஆம் திகதி தீர்த்தம் ஆகிய உற்சவங்களும் நடைபெறும். (ச)

## ஜனாதிபதி மகிந்த தலைமையில் எம்.பிக்களுக்கு விசேட கூட்டம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற சகல நாடாளுமன்ற உறுப்பினர்களின் விசேட கூட்டம் ஒன்று நேற்று மாலை கொழும்பில் நடைபெற்றுள்ளது.

இக் கூட்டத்தின்போது அவசர கால நிலைமையை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான தீர்மானம், வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் தேர்தல் விவகாரங்கள் என்பனவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சார்க் மாநாட்டின் பின்னரான அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. (ச)

## சார்க் அபிவிருத்தி நிதியத்தின் தலைமையகம் பூட்டானில்

(கொழும்பு)

307 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆரம்ப முதலீட்டுடன் ஸ்தாபிக்கப்படும் சார்க் அபிவிருத்தி நிதியத்தின் தலைமையகம் பூட்டான் தலைநகரான திம்புவில் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## சூட்டுக் காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு


(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கடற்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து இந்தச் சடலம் யாழ்ப்பாணப் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இச் சடலம் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ–5)

# கோத்தபாய, சரத்பொன்சேகா, பசில் மூவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை

### அமெரிக்க தமிழர்கள் அமைப்புத் தெரிவிப்பு



(வாஷிங்டன்)


இலங்கை அரசின் முக்கிய நபர்களாகக் கருதப்படும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகிய அமெரிக்க பிரஜா உரிமை



யுள்ள மூவருக்கும் எதிராக இன சுத்திகரிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு அமெரிக்காவில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.


அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் இந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதில் *(12 ஆம் பக்கம் பார்க்க)*



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலம்புரியின் ஏற்பாட்டில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு -2008



ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தின் வழிகாட்டலில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் யாழ்.கிளையின் நிர்வாக உத்தியோகத்தர் அ.சுபேசன், சந்தைப்படுத்தல் முகாமையாளர் எஸ்.சத்தியன், வலம்புரியின் செய்தி ஆசிரியர் க.சதீபன் ஆகியோர் மாணவிகளுக்கு வழிகாட்டல் கையேடுகளை வழங்குவதையும் கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்கள், தொடக்க விழாவில் கலந்து கொண்ட அதிதிகளையும் படங்களில் காணலாம்.

## தொலைபேசிப் பாவனையாளர் மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல்

கையடக்கத் தொலைபேசிகளின் சிம் அட்டைகள் மற்றும் சிடிஎம்ஏ தொலைபேசிகள் என்பனவற்றை பதிவு செய்தவர்கள் மாத்திரமே பயன்படுத்த முடியுமென்ற அரசாங் கத்தின் தீர்மானத்தை வலுவிழக்கச்செய்யக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு வொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை சுதர்சன குணவர்த்தன என்று சட்டத்தரணியே தாக்கல் செய்துள்ளார். மனுவின் பிரதிவாதிகளாக தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழு அதிகாரிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறித்த ஆணைக் குழுவினரால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் காரணமாக நுகர்வோர் என்ற வகையில் சுதந்திரமாக தொலைபேசிகளை பாவனைக்குகுட்படுத்தும் உரிமை மீறப் பட்டுள்ளதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

## வலம்புரியின் புலமைப் பரிசில் கருத்தரங்கு

# தீவக வலயப் பாடசாலைகளில் 7ஆம் திகதி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலம்புரி நடத்தும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கில் தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பின்வரும் நிலையங்களில் அவற்றை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதாக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

| நிலையம் | பங்குபற்றும் பாடசாலைகள் |
|---|---|
| யா/புங்குடுதீவு ம.வி | புங்குடுதீவிலுள்ள 5 பாடசாலைகள் |
| யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.டி.வி – ஆரம்பப் பிரிவு, காரைநகர். | காரைநகரிலுள்ள 8 பாடசாலைகள் |
| யா/புனித மரியாள் வித். ஊர்காவற்றுறை | யா/கரம்பொன் சண்முகநாத வி.<br>யா/மெலிஞ்சிமுனை றோ.க.வி<br>யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வி.<br>யா/புனித மரியாள் வி.<br>யா/தம்பாட்டி அ.த.க.பா<br>யா/நாரந்தனை கணேசா வி.<br>யா/நாரந்தனை றோ.க.வி. |
| யா/வேலணை ஐயனார் வித்தி. | யா/வேலணை சரஸ்வதி வி.<br>யா/வேலணை சைவப்பிரகாச வி.<br>யா/வேலணை மேற்கு நடராசா வி.<br>யா/வேலணை ஐயனார் வி.<br>யா/ சரவணை நாகேஸ்வரி வி.<br>யா/ சரவணை சின்னமடு றோ.க.வி.<br>யா/ மண்டைதீவு றோ.க.வி.<br>யா/ மண்டைதீவு ம.வி.<br>யா/அல்லைப்பிட்டி பராசக்தி வி.<br>யா/மண்கும்பான் அ.த.க.வி |
| யா/ நெடுந்தீவு ம.வி | நெடுந்தீவிலுள்ள பாடசாலைகள் |
| யா/அனலைதீவு வடலூர் அ.த.க.வி | இரண்டு பாடசாலைகள் |
| யா/நயினாதீவு நாகபூசணி வித்தி. | இரண்டு பாடசாலைகள் |
| யா/எழுவைதீவு றோ.க.வி | இரண்டு பாடசாலைகள் |

# ஆசிய பாராளுமன்றம் உருவாக்க ஈரான் அரசாங்கம் ஆலோசனை

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் மேலும் பலமான பங்க ளிப்பை வழங்கும் நோக்கில் ஆசிய பாராளு மன்றமொன்று அமைக்கப்படவேண்டுமென ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஆலோ சனை வழங்கியுள்ளார்.

சர்வதேச ரீதியில் முக்கிய பங்கினை செலுத்தும் வகையில் ஆசியான், சார்க் மற்றும் பொருளாதார கூட்டுறவு அமைப்பு ஆகியன இணைந்து ஆசிய பாராளுமன்ற மொன்றை உருவாக்கி செயற்படவேண்டு மென சார்க் மாநாட்டில் பார்வையாளராக கலந்து கொண்ட ஈரான் வெளிவிவகார அமைச் சர் மொனொச்சர் மொட்டாக்கி ஊடகவிய லாளர்களிடம் கூறினார்.

சார்க் உறுப்பு நாடுகளுக்கும் தெஹ்ரா னுக்கும் இடையிலான பொருளாதார அரசி யல் உறவுகளை எதிர்காலத்தில் பலப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற் கொள்ளப்படுமென அவர் நம்பிக்கை வெளி யிட்டார்.

ஈரானிய கம்பனிகள் பல இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டுள் ளமையானது ஈரானுக்கும் கொழும்புக்கும் இடையிலான நல்லுறவை மேலும் பலப் படுத்தும் என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

இலங்கையில் நடைபெற்று முடிந்த 15-வது சார்க் உச்சி மாநாட்டில் சீனா, ஈரான், அமெரிக்கா,தென்கொரியா, ஜப்பான், மொறி சியஸ் ஆகிய நாடுகள் பார்வையாளர்களாக கலந்து கொண்டிருந்தன.

ஈரான் ஜனாதிபதி மஹமூட் அஹமது நிஜாட் இந்த வருடம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன் பல்வேறு அபிவி ருத்திப் பணிகளுக்கு உதவிகளை வழங்கு வதாக உறுதியளித்துச் சென்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## விவசாய சான்றிதழ் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவ னம் இலவச விவசாய சான்றிதழ் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண் ணப்பங்களை கோரியுள்ளது.

பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபால னம் ஆகிய பாடநெறிகளை உள்ளடக்கிய நான்கு மாத கால பயிற்சி நெறியில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த 17-26 வயதிற்குட்பட்ட இருபாலாரும் பங்குபற்ற லாம்.

இதில் இணைய விரும்புவோர் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள யாழ்ப்பாணக் கல் லூரி விவசாய நிறுவனத்தில் நடைபெற வுள்ள நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அழைக்கப்படுகின்றனர்.

நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகை மைச் சான்றிதழ்கள், கிராம அலுவலரின் நற் சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ் பத்திரங் கள் ஆகியவற்றை எடுத்து வருமாறு கேட்கப் படுகின்றனர்.

பயிற்சிக் காலத்தில் உதவு தொகை வழங் கப்படுவதோடு பயிற்சி நிறைவில் சான்றித ழும் வழங்கப்படும். (ஓ)

## உதைபந்தாட்டப் போட்டி

(பருத்தித்துறை)

மாலிசந்தி மைக்கேல் விளையாட்டுக் கழகத்தின் 15-வது ஆண்டு நிறைவை யொட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையேயான போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வல்வெட்டித் துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4.30 மணிக்கு கரவெட்டி கலட்சி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழ கமும் மோதுகின்றது.

நேற்றைய போட்டியில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் வெற்றி யீட்டியது.

மற்றைய போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை சக் கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழ கம் எதிர்த்து மோதி சமனிலையில் முடிபுற் றது. (ச-52)

# இன்று ஒரு தகவல்

## மன நிறைவு

ஒரு ராஜாவுக்கு நாடு முழுவதும் நிறைய மரங்கள் நட்டு வளர்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. தானே அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்று அரண் மனையைச் சுற்றி நிறைய மரங்கள் நட்டு வளர்த்தார். இதைப் பார்த்த ஜனங்களும் தங்கள் வீட்டைச்சுற்றி மரக் கன்றுகள் நட்டு வளர்த்தார்கள்.

கொஞ்சகாலத்திலேயே ஊர்முழுவதும் பசுமையாக மாறியது. இது எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்தது.

ஒருநாள் அந்த ராஜா அரண்மனையைச்சுற்றியிருக்கும் விதவிதமான மரங்களையெல்லாம் பார்த்து ஒவ்வொரு மரத்தையும் விசாரித்தார். எந்த மரமும் சந்தோஷமாக இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொன்றுக்கும் மனதில் குறை இருந்தது.

முதலில் ஆலமரத்திடம் போனார். அது, "மன்னா நான் நாலாபுறமும் கிளைகளைப் பரப்பி அடர்த்தியாக, பெரிதாக வளர்ந்திருக்கிறேன். இருந்தாலும் என்ன பிரயோசனம். என்னுடைய பழங்கள் மிகவும் சிறியதாக என் கண் ணுக்கே புலப்படாத அளவில் இருக்கிறதே... இது எனக்கு பெரிய அவமானமாக இருக்கிறது. பேசாமல் ஒரு புயல் வந் தால் சாய்ந்துவிடலாம் என்று பார்க்கிறேன்!" என்று புலம்பியது.

அடுத்ததாக ராஜா ஒரு அத்திமரத்திடம் போனார். அதுவும் புலம்பியது. "நானும் பெரிய மரந்தான். இலை அழகாயிருக்கிறது. பழம் அழகாயிருக்கிறது. இருந்தாலும் உள்ளே விஷயமில்லையே" "அத்திப்பழத்தைப் பிட்டுப் பார்த்தால், அத்தனையும் சொத்தை!" என்ற பழ மொழியே உண்டாகிவிட்டதே... இப்படி ஒரு கெட்ட பெயருடன் நான் இருக்க வேண்டுமா? என்றது.

அடுத்து ஒரு வேப்பமரத்திடம் போனார். அது தன்னுடைய வேதனையை வெளியிட்டது. "எனக்கு எவ்வளவோ மருத்துவ குணங்களெல்லாம் இருக்கிறதாக சொல்லியிருக் கிறார்கள். இருந்தாலும் என்ன பிரயோசனம்... எனது பழத்தை மனிதர்கள் எவரும் விரும்பி சாப்பிடுவதில்லையே!" என்றது.

ராஜா அடுத்ததாக ஒரு பனைமரத்திடம் போனார் "நான் நல்ல உயரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன் மற்ற மரங்களெல்லாம் என்னை அண்ணாந்து தான் பார்க்க வேண்டும். இருந்தாலும் என்னிடம் நிழலுக்காக யாரும் வந்து ஒதுங்குவதில்லையே!" என்றது.

என்ன இது எல்லா மரங்களும் திருப்தியில்லாமல் இருக்கிறதே என்று நினைத்துக்கொண்டே ராஜா ஓக் மரத்திற்கருகில் போனார். அது,

"இலையுதிர் காலத்தில் எனது இலைகள் எல்லாம் உதிர்ந்து முடிகொட்டிய மனிதர்கள் மாதிரி மொட்டையாக உள்ளதே... என்ன வாழ்க்கை இது" என்று அலுத்துக் கொண்டது. அடுத்து ஒரு புளியமரத்திடம் போனார். ராஜா, அது என்ன சொல்லிற்று தெரியுமா?

"என்னுடைய நிழலில் யாரும் தங்க மாட்டார்கள். உடம்புக்கு சூடு என்று ஒதுங்கிப்போய் விடுவார்கள். அடி மரத்தைப்பார்த்தால் பட்டையெல்லாம் உரிந்து கேவலமாக இருக்கிறது!" என்றது.

அடுத்து முருங்கை மரம். "என்னுடைய இலை, காய் கனியெல்லாம் சத்து உண்டு என்பது உண்மைதான். ஆனால் என் உடம்பில் சத்து கிடையாது. வேகமாக ஒரு காற்று அடித்தால் முறிந்து விடுவேன் என்ன வாழ்க்கை இது?" என்று வருத்தப்பட்டது.

ராஜா யோசித்தார். மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம். மழைக்கும் பூமியின் செழிப்புக்கும் அவைதான் காரணம். வீடுகட்டவும், நாற்காலி செய்யவும், உணவுக்கும் என்று பல நன்மைகளைக் கொடுக்கிறது. இருந்தும் எல்லா மரமும் நிம்மதியில்லாமல் இருந்துகொண்டிருக்கிறதே! என்று நினைத்தார்.

அப்பொழுது அங்கிருந்த மகிழ மரம் அவர் கண்ணில் பட்டது. அந்த மரம் மட்டும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது மாதிரிதெரிந்தது. உடனே ராஜா அதனிடம் போனார். "உனக்கு மனதில் ஏதும் குறை உண்டா?" "என்று கேட்டார். ." இல்லை நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன் என்றது மகிழமரம்.

"அப்படியா?" என்று ஆச்சரியமாகக் கேட்டார் ராஜா. "அமாம் மன்னா... இந்த இடத்தில் நீங்கள் ஒரு முருங்கை மரத்தையோ, வேப்பமரத்தையோ கூட நட்டிருக்கலாம் ஆனால் இந்த இடத்தில் நடுவதற்கு என்னைத் தேர்ந் தெடுத்தீர்களே... அதுவே எனக்குப் பெருமை... அதுவே திருப்தி!" என்றது.

மகிழமரம் சாதாரணமாகத்தான் இருக்கும். இளம் மஞ்சள் நிறப்பூக்கள் காய்ந்தும் மணம் வீசக்கூடியவை. நாம் இந்த உலகத்தில் மனிதனாக பிறந்திருக் கிறோமே அதுவே பெருமையில்லையா? இந்த நிறைவுதான் மகிழ்ச்சியின் ரகசியம். ஒரு பையன் அப்பாவிடம், அப்பா நீங்கள் இந்த உலகத்தில் ஒரு மனிதனாக பிறந்தது என்னுடைய அதிர்ஷ்டம்! என்றான். "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்றார் அப்பா.

"நீங்கள் ஒரு கரடியாக பிறந்திருந்தால் இந்நேரம் நானும் ஒரு கரடிக்குட்டியாகத்தானே இருந்திருப்பேன்!" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆசியான், சார்க், பொருளாதார அமைப்பு இணைந்து ஆசிய பாராளுமன்றம் உருவாக்கப்படவேண்டும்

## ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஆலோசனை

சர்வதேச ரீதியில் மேலும் பலமான பங்களிப்பை வழங்கும் நோக்கில் ஆசிய பாராளுமன்றமொன்று அமைக்கப்படவேண்டும் என ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

"சர்வதேச ரீதியில் முக்கிய பங்கினைச் செலுத்தும் வகையில் ஆசியான், சார்க் மற்றும் பொருளாதார கூட்டுறவு அமைப்பு ஆகியன இணைந்து ஆசிய பாராளுமன்றமொன்றை உருவாக்கி செயற் படவேண்டும்" என சார்க் மாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொண்டிருந்த ஈரான் வெளிவிவகார அமைச்சர் மொனொச்சர் மொட்டாக்கி ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

சார்க் உறுப்பு நாடுகளுக்கும், தெஹ்ரானுக்கும் இடையிலான பொருளாதார அரசியல் உறவு களை எதிர்காலத்தில் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஈரானிய கம்பனிகள் பல இலங்கையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ளமையானது. ஈரானுக்கும், கொழும்புக்கும் இடையிலான நல்லுறவை மேலும் பலப்படுத்தும் என ஈரானிய வெளி விவகார அமைச்சர் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப் பிட்டார்.

இலங்கையில் நடைபெற்று முடிந்த 15ஆவது சார்க் உச்சி மாநாட்டில் சீனா, ஈரான், அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான், மொறிசியஸ் ஆகிய நாடுகள் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டிருந்தன.

ஈரான் ஜனாதிபதி மஹமூட் அஹமது நிஷாட் இந்த வருடம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன், பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கு உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துச் சென்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-6)

# தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகவே மனிதாபிமான யுத்தத்தை ஆரம்பித்தோம்

## வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

பல தசாப்தங்களாக பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கித் தவிக்கும்



தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகவே மனிதாபிமான நடவடிக்கையாகபோரை ஆரம்பித்துள்ளோம். புலிகளின் தலைவர் பிரபாகரனின் காலடியில் மண்டியிட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொண்டுள்ளனர் என்றும் அமைச்சரும் அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சார்க் மாநாட்டினை முன்னிட்டு இலங்கை வந்துள்ள வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்காகவே படையினர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இது தமிழ் மக்களுக்கு எதிரான தல்ல.

பல தசாப்த காலங்கள் ஜனநாயகம் மறுக்கப்பட்டு, வாக்குரிமை மறுக்கப்பட்டு பிரபாகரனின் சர்வதிகாரத்திற்குள் சிக்குண்டுள்ள தமிழ் மக்களை பாதுகாக்கவே அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

சிங்கள மக்களின் உரிமைகள் மட்டுமல்ல தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதும் எமது கடப்பாடாகும். ஒரு வருட கால எல்லைக்குள் எமது படையினர் கிழக்கை மீட்டெடுத்தனர். இன்று அங்கு ஜனநாயகம் நிலை நிறுத்தப்பட்டு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் நட்புறவுடன் வாழ்கின்றனர்.

பிரபாகரனின் இரும்பு சப்பாத்துகளுக்கு மக்களை அடிமைப்படுத்த தொடர்ந்தும் இடமளிக்க முடியாது. இரக்கமில்லாத இதனைப் போன்ற பயங்கரவாதம் உலகில் வேறெங்கும் இல்லையென்றே கூற வேண்டும்.

கடந்த காலத் தலைவர்களான ஜே. ஆர்., பிரேமதாஸ, சந்திரிகா ஆகியோர் பிரச்சினையை தீர்க்க இதய சுத்தியுடன் செயற்பட்டனர். ஆனால் முடியவில்லை.

புலிகள் ஜனாதிபதி பிரேமதாஸாவை கொலை செய்தனர். சந்திரிகாவின் ஒரு கண்ணைப் பறித்தனர். இவ்வாறான வரலாறு இருந்த போதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றவுடன் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஜெனிவாவில் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தினார். இதனை நிராகரித்த புலிகள் இராணுவத் தளபதியையும் பாதுகாப்பமைச்சின் செயலாளரையும் கொலை செய்ய முயற்சித்தனர் என்றார்.

இதன் போது இவ்வருட இறுதிக்குள் யுத்தம் முடிந்துவிடுமா? என வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி ஒன்றை எழுப்பினார். இதற்குப் பதலளித்த அமைச்சர்,

இது இராணுவத்தினரின் கருத்து. படையினர் ஒரு திட்டத்திற்கமையவே செயற்படுகின்றனர். சிலசில பிரச்சினைகளால் காலதாமதமேற்படும். அவ்வாறு ஏதும் ஏற்படாமல் இருந்தால் இராணுவத்தினர் தமது இலக்கை அடைய முடியும் என்று தெரிவித்தார். (அ-6)

# இராசிபலன்

05.08.2008
(ஆடி 21, செவ்வாய்க்கிழமை)
உத்தரம் முன்னிரவு 06.50 மணிவரை
சதுர்த்தி பிற்பகல் 01.03 மணிவரை
இராகுகாலம் 03.04-04.34மணிவரை
சுபநேரம்-10.34-12.04 மணிவரை
அச்சுவேலி பிள்ளையார் கொடி

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தேகநலன், சத்துருஜெயம். |
| இடபம் | வியாபார விருத்தி, மனச்சஞ் சலம், பெரியோர் உதவி, பணவிரயம். |
| மிதுனம் | உறவினர் சந்திப்பு, ஆரோக்கியக் குறைவு, கல்வியில் ஆர்வம். |
| கடகம் | பிரயாண நன்மை, காரிய அனுகூலம், பிறர் உதவி, போசனசுகம். |
| சிங்கம் | மனக்கிலேசம், முயற்சிதாமத் மாகும், அதிகசெலவு, எதிர்பாரதநன்மை. |
| கன்னி | தன்னம்பிக்கை, பெரியோர் சந்திப்பு, விருந்துபசாரம், நல்லமுயற்சி. |
| துலாம் | காரிய அலைச்சல், உஷ்ண வியாதி, சுபசெலவு, மனஸ்தாபம். |
| விருச்சிகம் | காரிய அனுகூலம், நல்ல வருமானம், பெருமையடைதல். |
| தனுசு | தொழில் நன்மை; முயற்சிகை கூடும், பிறர் உதவி, அதிகாரம். |
| மகரம் | தந்தைவழி உறவு, புதிய திருப்பம், பித்தரோகம், முயற்சிதாமதம். |
| கும்பம் | ஆரோக்கியக்குறைவு, காரிய தடங்கல், பிரயாணபயம். |
| மீனம் | சௌக்கிய விருத்தி, களஸ்திர நன்மை, காரியசித்தி. |

வளவன்

# சுற்றிவளைப்பில் 61 தமிழர்கள் நீர்கொழும்பு நகரில் கைது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு நகரின் பல்வேறு இடங்களிலும் 61 தமிழர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

திடீர் சுற்றிவளைப்பின்போது சந்தேகத்தின்பேரில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைக்காக 61பேர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு, கடற்கரைத்தெரு, முத்துமாரி அம்மன் வீதி, அஸரப்பா வீதி, தளுபத்தை பல்லன்சேனை வீதி, நகரின் வர்த்தகப் பிரதேசம் அமைந்துள்ள வீதிகள் உட்பட மேலும் பல இடங்களில் இருந்தும் இவ்வாறு பலர் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வடக்கு, கிழக்கு மற்றும் மலைநாட் டைச் (மலையகம்) சேர்ந்தவர்கள் எனவும் நீர்கொழும்பில் தங்கியிருந்ததற்கான சரியான காரணத்தை அவர்கள் உறுதிப்படுத்த முடியாதவர்களாக இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் பலர் நீர் கொழும்பில் நீண்டகாலம் வசித்து வருபவர்கள் எனவும் அவர்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத் தும் தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்களை வைத்திருந்ததாகவும் கைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சனிக்கிழமை கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 30 பேரை விடுவிக்க தான் பொலிஸ் நிலையம் சென்று நடவடிக்கை எடுத்ததாக நீர்கொழும்பு மாநகர சபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் சஜித் மோகன் தெரிவித்தார். கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் சந்தேகத்துக்கிடமானவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-6)






யாழ்.பல்கலைக்கழக இதழியல் டிப்ளோமா முழு நேரக் கற்கைநெறி மாணவர்களின் பயிற்சிப் பத்திரிகை "கடிவாளம்" நேற்று ஊடகவளங்கள் பயிற்சி மையத்தில் அதன் பணிப்பாளர் வாழ்நாட் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் உரையாற்றுவதையும், பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, இதழியல் பயிற்சி இணைப்பாளர் விமல்சுவாமிநாதன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், முதல் பிரதியை பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையிடமிருந்து துணைவேந்தர் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

## தையல் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடாத்தப்படும் பாடசாலையை விட்டு விலகிய யுவதிகளுக்கான 6ஆவது தொகுதி தையல் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து சாவ-விமலாஸ் நிறுவனத்தில் ஒப்படைக்குமாறு கழகச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-29)

## முன்பள்ளித் தொண்டர்களுக்கு 'போரூட்', துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச முன்பள்ளித் தொண்டருக்கான துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் போரூட் நிறுவனத்தால் வழங்கப்பட்டது. இதில் பிரதேச சபைக்குட்பட்ட 9 தொண்டர்களுக்கும் நகரசபைக்குட்பட்ட 3 தொண்டர்களுக்குமாக 12 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

போரூட் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டத்தை இத் தொண்டர்களே நடை முறைப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (அ-29)

## ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்களின் கணக்கு இலக்கத்தினை தேசிய அடையாள அட்டைக்கு மாற்றும் வேலைத்திட்டம்

ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்களின் கணக்கு இலக்கத்தினை தேசிய அடையாள அட்டைக்கு மாற்றும் வேலைத்திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவுக்குக் கொண்டுவரப்படவுள்ளதால் யாழ்.உதவி தொழில்நுட்ப ஆணையாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட உரிய படிவங்களை குறைபாடுகளின்றி பூரணப்படுத்தி குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைகக நடவடிக்கை எடுக்குமாறு யாழ. உதவித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## விண்ணப்பம் கோரல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த.(சா/த) இல் ஆங்கில பாடத்தில் விசேட சித்தி (A/D) அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி உட்பட க.பொ.த. (உ/த) இல் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆங்கில மொழி மூலக் கல்வியைப் பயின்றவர்கள் மற்றும் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆங்கில மொழி மூலக் கல்வியைப் பயின்றவர்கள் மற்றும் அரச பணிகளில் இருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் என வடமராட்சி வலயக் கல்விப் பணப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (அ)

## நல்லூர் வீதியில் பரப்பப்பட்ட மணல் போதாது- அடியார்கள் விசனம்

நல்லூர் கந்தனின் உற்சவம் நாளை ஆரம்பமாவதையொட்டி சகல புறச்செயற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.பந்தல்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. கோயிலின் நாற்புறமும் புதுமணல் பரப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேநேரத் தில் மேற்கு தெற்கு வீதிகளில் பரப்பப்பட்டுள்ள மணல் போதாமல் இருப்பதாக அடியார்கள் சிலர் கவலை தெரிவித்துள்ளனர். (அ)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம் நடாத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை எதிர்வரும் 8 ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பூசை வழிபாடுகள் பஜனை ஆகியவற்றுடன், மாணவ மாணவிகள் பேச்சு மற்றும் ஆசிரியர்களின் சொற் பொழிவும் மாணவர்களின் பக்திப் பாடல்கள் இசை நிகழ்ச்சியும் "தடுத்தாட் கொண்ட புராணம்" -புராண படனமும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## நிதிமுகாமை தொடர்பான கலந்துரையாடல்

கடந்த மாதம் 27 ஆம் திகதி யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற நிதி முகாமை தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றாத கோப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அனைவரையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ)

# கிராம மட்ட அமைப்புக்களின் அவசியம்

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் பிரதேச ரீதியாகப் பல சமூகக் கட்டமைப்புக்கள் காணப்பட்டது. இக் கட்டமைப்புக்கள் உருக் குலையாமல் ஒரு கட்டுக்கோப்பான சமூக அமைப்பைக் கொண்டு பல்வேறு பிரதேசங்களிலும் மக்களை மையமாகக் கொண்ட சனசமூக நிலையங்கள், கிராம அபிவி ருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உட்பட பல்வேறு உள்ளூர் அமைப் புக்கள் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து மக்களுக்கான பல்வேறு பட்ட சேவைகளை முன்னெடுத்து வந்துள்ளன.

ஆனால் இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் அவ் அமைப்புக்களின் செயற்பாடு அற்றுப் போய்விட்டது. என்றே குறிப்பிடலாம். இதற்குப் பல்வேறு காரணங்கள் முன்வைக் கப்பட்டாலும் அவை இன்று செயற்படாமல் இருப்பது என்பது அன்று முதல் பேணப்பட்டு வந்த சமூகக் கட்டமைப்பில் ஒரு எதிர்மறை யான விளைவை மறைமுகமாக ஏற்படுத்தியி ருக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை. இவ் உண்மை மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டுமாயின் சமூக அமைப்புக்கள் மக்களை எவ்வாறு சமூகக் கட்டமைப்புக்குள் கட்டுக்கோப்பான சமூகமாக வளர்த்து வந்துள்ளது என்ப தை மக்கள் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் ஒரு கிராம அபிவிருத்திச் சங்கம் மிகவும் திறமையான முறை யில் செயற்படுகின்றது எனில் அவ் அமைப்பில் பின்வரும் விபரங்கள் ஒழுங்கான முறையில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும்.

- குறிப்பிட்ட கிராமத்தின் மக்கள் தொகை
- கிராம மக்களின் தொழில்கள்
- கிராமத்தில் காணப்படும் பிரச்சினைகள் (குடிநீர் மலசலகூடம் மின்சாரம் போன்றன)
- குடும்பங்களின் எண்ணிக்கை
- பாடசாலை செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை
- பிறப்பத்தாட்சிப்பத்திரம் மற்றும் அடிப்படை ஆவணங்கள் இல்லாதவர்களின் எண்ணிக்கை
- வறுமைப்பட்ட மக்களின் எண்ணிக்கை
- அரச உத்தியோகத்தரின் எண்ணிக்கை
- முதியோர்களின் எண்ணிக்கை
- வலது குறைந்தவர்களின் எண்ணிக்கை

இவ்வாறு பல்வேறு தரவுகளை அவ் அமைப்புக் கொண்டிருக்கும் இவ்வாறு சகல விடயங்களையும் ஆவணப்படுத்தி அவ் அமைபபு, செயற்பாடுகளை முன்னெடுக்குமிடத்து மக்களின் பல்வேறு பிரச்சினைகள் இலகுவில் தீர்த்து வைக்கப்படும். அதாவது கிராமத்தில் காணப்படும் பிரச்சினைகளை எழுத்து மூலமாக எழுதி கிராம சேவையாளரின் சிபார்சுடன் இவ் அபிவிருத்திச் சங்கமானது உரிய அதிகாரி களைத் தொடர்பு கொள்ளுமிடத்து குறிப்பிடத் தக்களவு பிரச்சினைகளை இலகுவில் தீர்த்து வைத்து மக்களின் சந்தோசமான வாழ்வுக்கு வழியமைத்துக் கொடுப்பது மட்டுமல்லாமல் கிராமத்தையும் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

இச் செயற்பாட்டையே ஆரம்ப காலத்தில் பல அமைப்புகள் செய்துவந்தன. இன்றும் கூட குறிப்பிட்ட சில அமைப்புக்களே இவ்வாறான செயற்பாடு களை முன்னெடுக்கின்றது.

யாழ். மாவட்டத்தில 15 பிரதேச செயலர் பிரிவுகள் உள்ளன. அவற்றில் குறைந்தது ஒரு பிரதேச செயலர் பிரிவுக்கு 10 கிராம மட்ட அமைப்புக்களாக கணக்கிடுமிடத்தும் 150 கிராமமட்ட அமைப்புக்கள் பதிவு செய்யப்பட்டி ருக்கின்றன என்று குறிப்பிடமுடியும். அவற் றில் எத்தனை கிராம மட்ட அமைப்புக்கள் மேற் குறிப்பிட்ட செயற்பாடுகளில் குறைந்தது இரு செயற்பாடுகளையாவது முன்னெடுக்கின்றன அல்லது ஓரளவுக்காவது செயற்படுகின்றன என்றால் 1/3 பங்கு கிராம மட்ட அமைப் புக்களே செயற்பாடுகளை ஓரளவுக்கேனும் முன்னெ டுக்கின்றது. மற்றைய அமைப்புக்கள் பெயரள வில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அப்படியாயின் ஏன் இவ் அமைப்புகள் செயற்படவில்லை. மக்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என ஒரு வினா தொடுக்கப்படும் போது மக்கள் அக்கறையில்லை அல்லது ஒத்துழைப்பு இல்லை என்கின்ற பதிலே கிராம மக்கள் முதல் அனைத்துத் தரப்பினராலும் முன் வைக்கப்படும் ஒரு பதிலா கக் காணப்படும்.

இவ் அமைப்புக்களை இயக்க வேண்டிய பொறுப்பு யாருடையது? மக்களுடையது. மக்களுக்குச் சேவை செய்வதற்காக மக்களால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு. இவ் அமைப்பைச் செயற்படுத்த வேண்டியது மக்களின் பொறுப்பு. எமது சமூகத்தை நாம் முன்னேற்றாமல் யார் முன்னேற்றுவது என்ற எண்ணம் மககள மனத்ல உத்கக வேணடும. இது தொடர்பாக அனைத்துத் தரப்பினரும் விழிப்புணர்வடைய வேண்டும் அரச சேவையைப் பொறுத்தவரையில் இவ் உள்ளூர் அமைப்புகளின் நலன்களைக் கவனிப்பதற்காகவே பிரதேச செயலகங்களில் தனித்தனியாக ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களை மக்கள் அணுகவேண்டும். இவ்வாறு அணுகும் போது இவ் அமைப்புக்களின் முன்னேற்றம் தொடர்பான ஆலோசனைகள் வழிகாட்டல்கள் மட்டுமல்லாது சில சில உதவித் திட்டங்களையும் பெற்று மக்களுக்கு வழங்க முடியும். அவ்வா றில்லாமல் இவ்வாறான அமைப்புக்களில் மக்களின் பங்களிப்பு இன்றிய நிலையில் எதுவித செயற்பாட்டையும் கிராமங்களில் முன் னெடுக்க முடியாது.

தற்போதுள்ள காலத்தில் உதவித் திட்டங்களை வழங்க முன்வரும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் உள்ளூர் அமைப்புக்கள் ஊடாகவே திட்டங்களை முன்னெடுப்பதற்கு பெரிதும் விரும்புகின்றது. இவர்கள் இவ்வாறு விரும்புவதற்கு பல பின்புலக் காரணங்கள் இருந்தாலும் அவற்றுள் முக்கியமானவையாக, குறிப்பிட்ட கிராமத்தில் காணப்படும் பிரச்சினை தொடர்பாக பல்வேறு மட்டங்களுக்குத் தெரியும் விடயங்களிலும் பார்க்க குறிப்பிட்ட கிராமமட்ட அமைப்புக்களுக்கு பல விடயங்கள் தெரியும். எனவே கிராமமட்ட அமைப்புக்கள் ஊடாக சரியான முறையில் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு திட்டம் வகுத்தல் என்பது சுலப மாகிவிடும் .அடுத்து குறிப்பிட்ட திட்டங்களை கிராம மட்ட அமைப்புக்கள் ஊடாக நடை முறைப் படுத்தும்போது உள்ளூர் தொழிலா ளர்கள் சிலர் தொழில் வாய்ப்பினைப் பெறு வார்கள். இவ்வாறு பல நல்ல விடயங்களைக் கருத்திற்கொண்டே உள்ளூர் அமைப்புகள் ஊடாக மேற்படி நிறுவனங்கள் திட்டங்களை முன்னெடுக்க முயற்சிப்பது வருவேற்புக்குரி யதாகும். இவ்வாறு கிராமமட்ட அமைப்புக்கள் ஊடாக திட்டங்களை முன்னெடுக்க முயற்சி செய்யும் நிறுவனங்கள் அவ் அமைப்புக்களின் கட்டுக்கோப்பான அல்லது உறுதியான செயற்பாடுகள் ஆவணப்படுத்தல்கள், தரவு சேகரிப்புக்கள், நிர்வாக ஒற்றுமைகள், சுவட்டு ஒழுங்குகள் ,ஆளணி வளங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு இவ்வாறான கிராமமட்ட அமைப்புக்களை குறிபபிட்ட கிராமத்தில் தமது திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகத் தெரிவு செய்கின்றன. அவ்வாறான ஒரு சந் தர்ப்பத்தில் எத்தனை உள்ளூர் அமைப்புக்கள் இவ் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து கிராமங் களில் திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போகி ன்றது என்றால் குறிப்பிட்ட ஒரு சில எண்ணிக் கையான அமைப்புக்களே அவ்வாறான தயார் நிலையில் உள்ளது.


யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அவ்வாறு செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றது. இருப்பி னும் கிராமங்களில் பல்வேறுபட்ட பிரச்சினை கள் காணப்படுகின்றது.

அவற்றைச் சரியான முறையில் இனங்காண்பதற்கு சிறந்த ஒரு வழியாக கிராம மட்ட அமைப்புக்கள்ளயே குறிப்பிட முடியும். அது மட்டுமல்லாமல் மக்கள் அனைவ ரையும் ஒற்றுமையுடனும் புரிந்துணர் வுடனும் செயற்பட வைத்து மக்களிடையே சேமிப்புப் பழக் கத்தை உருவாக்கி ஒரு கட்டுக் கோப்பான சமூக அமைப்பை உருவாக்கி சமூகத்தை முன்னேற்றுவதற்கு உள்ளூர் அமைப் புக்களானது ஒரு இன்றியமையாத கருவியாகும்.

**தி.திருஷாந்**
SOND நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு உள்ளூர் அமைப்புக்களை வலுப்படுத்துவ தற்கு கீழ் மட்ட மக்களிலிருந்து கல்வியிலாளர் கள், புத்திஜீவிகள், அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் என அனைத் துத் தரப்பினரும் அக்கறை செலுத்தி உள்ளூர் அமைப்புக்களை வலுப்படுத்தி செயற்படுமிடத்து அரச அதிகாரிகள் முதல் கிராமத்தில் பணியாற்றும் அனைவருக்கும் வேலை இலகுவாக்கப்படும் என்பது மட்டுமல்லாமல் சரியான முறையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே உதவித் திட்டங்கள் சென்றடையும். இதன் ஊடாக ஒவ்வொரு கிராமங்களும் எதிர்காலத்தில் முன்னேற்றம் காணும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

# நோத் முதல் கோபல்லவா வரை 58



### இலங்கையில் நடந்த எதிர்க் கிளர்ச்சி

புறான் அப்பு தம்மீது ஆங்கிலேயர் சுமத்திய குற்றங்களை அஞ்சா நெஞ்சோடு ஒப்புக் கொண்டார். “ஆம் நான் அரசனே! கண்டிப் பிரதானிகள் என்னை மன்னன் எனத் தெரிந்து முறைப்படி முடி சூட்டினார்.” கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட பின் ஏனைய சிற்றரசர்களோடு போகம்பரைச் சிறைச்சாலையில் அவர் அடைக்கப்பட்டார். அவர் 8-8-1848இல் தூக்கு மேடையில் நின்று அஞ்சாநெஞ்சோடு மரண தண்டனையை வரவேற்ற போது கூறிய வாசகம் மிக உருக்கமானது. “என் அன்னை என்னைப்போல இன்னொரு பிள்ளையை எனக்குத் தம்பியாகத்தந்திருந்தால் நான் என் முடியை வெள்ளையரிடம் பறி கொடுத்திருக்கமாட்டேன்'' துப்பாக்கிச் சூடு அவர் நெஞ்சைத் துளைக்கு முன் அவர் தம் நெஞ்சைத் தொட்டு, “இந்த வீர சன்னத்தனைப் போல இன்னும் நான்கு வீரர்கள் எனக்கு உதவியாய் இருந்தால், நான் வெள்ளைக்காரரை எங்கள் தாய்த்திரு நாட்டை விட்டுத் துரத்தியிருப்பேன்.”

வைக்கவுண்ட் ரொறிங்ரனுக்குப் பின்னர் சேர்யோச் அண்டர்சன் 27-11-1850இல் ஆள்பதியானார். அண்டர்சன் அவர்கள் இந்திய சிவில் சேவையிற் சித்தியெய்தி இந்தியாவிலே பெரிய பதவிகளை வகித்துப் பரிபாலன முறைகளில் திறமை பெற்றவர். அவர் 36 ஆண்டுகள் இந்தியாவில் சேவை செய்தபின் தமது 53 ஆம் ஆண்டுப் பராயத்தில் 1844 இல் இளைப் பாறி 1849இல் நைற் பட்டமளிக்கப் பெற்று மோறிற்றஸ் தீவின் ஆள்பதியாக நியமனம் பெற்றார். அண்டர்சன் அவர்கள் இலங்கையின் ஆள்பதியாக வந்த போது இங்கே சேர் சாள்ஸ் மக்காதி அவர்கள் குடியேற்றக் காரியதரிசியாயிருந்தார். அவருக்கும் ஆள்பதியவர்களுக்கும் உரிமை கடமையாதிய அலுவல்களில் பல பிணக்குகள் உண்டாகி அவை யாவும் குடியேற்ற மந்திரியாராய கிறே பிரபுவினால் தீர்த்து வைக்கப்பட்டன. ஆள்பதி அவர்களுக்கு வேறும் பல மனத்தாக்கங்கள் ஏற்படலாயின. முன்னர் ஓர் அந்தர் 100 சிலிங்காக விலைப்பட்ட இலங்

**மீள் பார்வை**

கைக் கோப்பி வெகுவாக விலை குறைந்து 45 சிலிங்காகி ஈற்றில் 27சிலிங்காகவும் விலை குறைந்தது. அத்தோடு கோப்பிப் பயிர்களுக்கு ஒரு வித பிளேக் நோய் உண்டாகிப் பெரிய நாசமும் ஏற்படலாயிற்று. அக்காலத்திலே தான் குடியேற்ற மந்திரியார் ஆள்பதி அவர்களுக்குச் சிக்கனமாயிருக்கும் வண்ணம் சுற்று நிருபங்கள் அனுப்பினார். இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கிளர்ச்சியில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட பெருந் தொகையான செலவும் சமாளிக்கப்பட வேண்டியிருந்தது.

இந்த நேரத்திலே ஆள்பதியவர்கள் தெருக் கட்டுதல் முதலியவற்றில் செலவைக் குறைத்த போது, தோட்ட முதலாளிகள் தெருக்கட்டுதல் அத்தியாவசியமென்றும் சிக்கனமாக இருப்பதற்கு வழி உத்தியோகத்தர் வேதனத்தைக் குறைப்பதும், உத்தியோகத்தர் தொகையைக் குறைப்பதுமே செய்யக் கூடிய காரியங்கள் என எதிர்த்து நின்றனர். இக்காலத்திலே ஆள்பதி அவர்களுக்குச் சட்டசபையின் உத்தியோக அங்கத்தவருடைய போக்கும் தலையிடியைக் கொடுத்தது. உத்தியோக அங்கத்தவர் சட்ட நிறை வேற்றுச் சபையில் தீர்மானிக்கும் போது சாதகமாக நின்ற அலுவல்களைச் சட்ட சபையில் பேசும்போது தம் நிலையிற் பிரிந்து பாதகமாயும் நிற்பாராயினர். அவர்கள் அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டியவராயிருந்தும், ஆதரியாமல் இருந்தமை ஆள்பதி அவர்களுக்குத் தலையிடியாய் இருந்தது. இதற்குக் காரணம் பெரும்பாலான உத்தியோக அங்கத்தவர் தோட்ட முதலாளிகளுக்கும் வர்த்தகருக்கும் நண்பர்களாயிருந்தமையேயாம். அண்டர்சன் அவர்கள் தாமாக விரும்பி 1855 ஆம் ஆண்டில் சுகவீனங் காரணமாக இளைப்பாறிக் கொண்டார்.

அண்டர்சன் அவர்களுக்குப் பின்னர் ஆள்பதியாய் வந்த ஹென்றிவாட் என்பார் தாராண்மைக் கொள்கையில் அனுதாபம் உள்ளவர். அவர் தென் அமெரிக்காவில் உள்ள மெக்சிக்கோ நாட்டில், அரச தூதுவராய் இருந்தபின் இங்கிலாந்துக்கு மீண்டு குறோனிக்கிள் என்ற வாராந்தப் பத்திரிகையை நடத்தியவர். அவர் பிரித்தானிய பாராளுமன்றத்திலே சென் அல்பண்ஸ் தொகுதியின் பிரதிநிதியாயிருந்து பணியாற்றியவர். அதன்பின் அயோனியன் தீவின் பாதுகாவலராயிருந்தபோது 1855 ஆம் ஆண்டின் மே மாதந் தொடக்கம் இலங்கை ஆள்பதியாய் நியமிக்கப் பெற்றார்.

ஹென்றிவாட் அவர்களின் பரிபாலன காலம் சீரும் சிறப்பும் வாய்ந்தது என்று பெர்குசன் அவர்கள் தமது ஒப்சேவர் பத்திரிகையில் பாராட்டி எழுதியுள்ளார். பெர்குசன் ஐம்பதாண்டு பத்திரிகைத் தொழில் நடத்திய பழுத்த அனுபவசாலி. ஹென்றிவாட் போக்குவரத்து வீதிகள், நீர்ப்பாசன குளங்கள், ஒல்லாந்தரின் பழைய வெட்டுவாய்க்கால்கள் என்பவற்றை நல்லமுறையில் திருத்தி அமைத்தார். தபால் போக்குவரத்தை நல்ல முறையில் அமைத்து இலங்கை வாழ் மக்களிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படச் செய்தார். ஆள்பதி வாட் அவர்கள் இளைப்பாறிப் போன காலத்தில் இலங்கையில் கொழும்பு, கண்டியாகிய இரு பிரதான நகரங்களையும் இலங்கையின் பல்வேறு நகரங்களோடு தெற்கு வடக்காகவும், கிழக்கு மேற்காகவும் இணைக்கும் 750 மைல் நீளம் உள்ள உறுதியான வீதிகள் செப்பமாக்கப் பட்டு விளங்கின.

**க.சி.குலரத்தினம்**

இன்னும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மூலமாயிருந்த கோப்பிச் செய்கை நல்ல புகைவண்டிப் பாதை இல்லாவிட்டால் பிறேசில், யாவா முதலிய நாடுகளோடு போட்டியிட முடியாது போகும் எனக் கருதினார். அதனால்1855 ஆம் ஆண்டின் யூலை மாதத்தில் சட்டசபை ஏகமனதாக அவர் கருத்தை நிறைவேற்றியது. அதன்படி புகை வண்டிப் பாதை அமைக்க ஆயத்தங்கள் செய்யப்படலாயின. (தொடரும்)



பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கை வங்கியின் பொன் அரும்புகள் மன்ற அலுவலகத் திறப்பு விழாவில் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் எம்.ஏ.அருமைநாயகம் உரையாற்றுவதையும், வித்தியாலய அதிபர் கே. யோகநாதன், பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி. ஆனந்தநடேசன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்களையும் விழாவில் கலந்துகொண்ட மாணவிகளையும் படங்களில் காணலாம். (படம்:பரு.நிருபர்)



சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி விழாவில் சபையின் நிர்வாக உத்தியோகத்தர் சி.தர்மகீர்த்தி உரையாற்றுவதையும், தென்மராட்சி உதவி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் சபைச் செயலர் திருமதி கு.ஆறுமுகம் ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் காணலாம். (படம்:சாவ.நிருபர்)

# 19 ஆம் நூற்றாண்டு 10



ஈழத்திலே நடந்த இலக்கிய, இலக்கண, சமயச் சர்ச்சைகளினூடும் சிறப்பானதோர் உரைநடை வளர்ந்தது வகை மாதிரிக்குக் கறோல் விசுவநாதபிள்ளை நாவலருக்கு எதிராக எழுதிய கண்டன வெளியீடான சுப்பிர தீபத்திலே வரும் பின்வரும் பகுதியைச் சுட்டிக் காட்டலாம்.

*வாய்மையும் தூய்மையும் நீதியும் நிறைவும் அன்பும் பொறையும் சிறந்து விளங்கிய பூவர் ஐயா (Daniel Poor) முதலிய மகான்கள் இங்குதித்து அலகை வாயிலும் அகந்தை வாயிலும் உலக வாயிலும் உடல் வாயிலும் அகப்பட்ட ஆன்மாக்கள் வீடு பெற்றுய்யும்படி இரட்சாபெருமானின் திருநாமத்தை உபதேசித்துக் கைமாறு கருதாது உதவுகின்ற மேகம்போல வைதீகம் லௌகீகக் கல்விப் பொருளை வழங்கினார்கள். அது கண்ட அழுக்காறுகொண்ட சில சத்திய விரோதிகள் மித்தியாரோபமான குற்றங்களையும் பழமொழிகளையும் அவர்களிலும் அவர்கள் போற்றுகின்ற சத்திய வேதத்திலும் ஏற்றினார்கள் நச்சுக்கும்பி தொடுத்தார்கள் அச்சிற்கும்பி அடித்தார்கள்.*

மேற்காட்டிய பகுதி 19 ஆம் நூற்றாண்டின் கண்டன உரை நடை எவ்வாறு இருந்ததென்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. இவ்வாறு நாவலருக்கு எதிராகக் கண்டனம் எழுதிய கறோல் விசுவநாதப்பிள்ளை பின்னர் கிறிஸ்தவத்தை விட்டு நீங்கி நாவலருடன் இணைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலர்நா. கதிரைவேற்பிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் முதலானோர் கண்டனத்திற்கெனத் தனியானதோர் உரை நடையைக் கையாண்டனர் எனலாம். இந்த உரைநடை மரபு வித்துவசிரோன்மணி சி. கணேசையரிடமும் காணப்பட்டது. சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவரின் பல்பரிமாண உரைநடையின் ஒரு கூறு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையிடமும் சுவறியது எனக் கருதலாம்.

19ஆம் நுற்றாண்டின் தமிழ் உரைநடை சிறப்புற அமைவதற்கு இக்கால அறிஞர்கள் குறியீடுகளைப் பயன்படுத்தியமையும் முக்கிய காரணம் எனலாம். நாவலரின் உரை நடைகளைப் படிப்போர் குறியீடுகளின் பயன்பாட்டை நன்கு அறிவர். தமிழ் உரை நடையிலே பொருளுக்கேற்ப பொருத்தம் நோக்கிக் குறியீடுகளை முதன் முதலாகப் பயன்படுத்திய பெருமை நாவலரையே சாரும்.

வாசகனின் தராதரத்திற்கேற்ப உரை நடை அமைய வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்து இக்கால அறிஞர்கள் உரை நடையைக் கையாண்டனர். 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் “வசன இலக்கியம்” தோன்றி வளரக்கூடிய அளவிற்கு உரைநடை நெகிழ்ச்சியும் வளர்ச்சியும் பெற்றிருந்தது தமிழ் வசன நடையின் பல்பரிமாண வளர்ச்சிக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் அறிஞர்கள் ஆற்றிய பணி விதந்து குறிப்பிட வேண்டியது.

### இலக்கியங்கள்

19ஆம் நூற்றாண்டில் ஈழத்திலே தோன்றிய இலக்கியங்களை நுனித்து நோக்குவோர் அக்கால அரசியல், சமூக பொருளாதார பண்பாட்டுக் கோலங்களின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் தெளிவாக அறிந்து கொள்வர். கல்வி பரவராகியமையும் மேலைப் புலத்தவரின் வருகையால் உருவான மாற்றங்களும் இக்காலத்தெழுந்த இலக்கியங்களின் குணாம்ச வேறுபாடுகளுக்கு காலாயமைந்தன எனலாம். இக்கால இலக்கியப் பெருக்கத்திற்கு நாம் ஏலவே குறிப்பிட்ட அச்சியந்திரப் பயன்பாடும் பத்திரிகைகளின் வருகையும் உந்து சக்தியாக அமைந்தன என்பதை மறுப்பதற்கில்லை. இக்காலத்து இலக்கியங்களை மரபு இலக்கியங்கள், மரபு சாராத (நவீன) இலக்கியங்கள் என இரண்டு வகையாகப் பகுத்து நோக்கலாம்.

மரபு இலக்கியங்கள் என்னும் வகையிலே புராணங்கள், தூது, அம்மானை, பிள்ளைத் தமிழ், நான்மணி மாலை, மும்மணிக் கோவை, பள்ளு, குறவஞ்சி, ஊஞ்சல் முதலான இலக்கிய வடிவங்களைக் குறிப்பிடலாம்.

இவை முன்னர் வகுத்த யாப்பு அணி மரபுகள் பிறழாமல் பெரும்பாலும் உள்ளடக்கத்திலும் மாற்றமில்லாமற் பாடப்பட்டன. (இவ்விலக்கிய வடிவங்களிற் சில உள்ளடக்க மாற்றத்துடன் இக்காலப் பகுதியிலே தோன்றியுள்ளன. அவை பற்றிப் பின்னர் விரிவாகக் குறிப்பிடுவோம்) மரபு இலக்கியங்களிற் பெரும்பாலானவை இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதச் சார்புடையனவையாகவே காணப்படுகின்றன.

சமயம் சாராத அகப்பொருட்துறை சார்ந்த தனி மனிதப் போற்றுதலாக அமைந்த இலக்கியங்களும் சிறுபான்மையாக இக்காலப் பகுதியிலே தோன்றியுள்ளன. 14 ஆம், 15ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழகத்திலே பெருவாரியாகத் தோன்றிய இலக்கியங்களின் பொருள் வடிவஅடிப்படைகளையே இக்கால ஈழத்துப் புலவர்களும் கையாண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

## ஈழத்துத் தமிழ் இலக்கியம்

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

# பாக்தாத்தில் குண்டு வெடிப்பு 12 பேர் உயிரிழப்பு

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் குடிவரவு குடி அகல்வு திணைக்களத்திற்கு அருகே ஞாயிற்றுக்கிழமை நிறுத்தப்பட்டிருந்த லொறியில் குண்டுவெடிப்பு ஏற்பட்டதில் 12 பேர் உயிரிழந்தனர்.

மூன்று பொலிஸார் உட்பட 34 பேர் காயமடைந்தனர்.

பாக்தாத்தின் வடக்குப்பகுதியில் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அலுவலகம் உள்ளது.

இந்த அலுவலகத்தில் இருந்து 200 மீற்றருக்கு அப்பால் சக்தி வாய்ந்த குண்டுகள் தாங்கிய மினிலொறி வெடித்துச் சிதறியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குண்டுவெடிப்பு நிகழ்வதற்கு சில மணி நேரங்கள் முன்பாக ஈராக் நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டம் கூடியது குறிப்பிடத்தக்கது.

எண்ணெய் வளம் மிகுந்த கோர்குக் பகுதியை தங்களின் சுயாட்சிப் பகுதியில் இணைக்கக்கோரும் குர்திஸ் இன மக்களின் நீண்ட நாள் கோரிக்கை குறித்து முடிவு எடுக்கவே நாடாளுமன்ற கூட்டம் கூட்டப்பட்டது. ஆனால் குர்திஸ் மக்களின் கோரிக்கைக்கு சன்னிப் பிரிவு முஸ்லிம்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. (அ-6)

# அமெரிக்காவில் வருடந்தோறும் 56ஆயிரம் பேருக்கு எயிட்ஸ்தொற்று

(அமெரிக்கா)

அமெரிக்காவில் வருடந்தோறும் 56 ஆயிரம் பேர் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுக்கு ஆளாகி வருவதாக அமெரிக்க நோய்கள் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்புப் பிரிவு தெரிவிக்கிறது.

இது முன்னர் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளை விட 40 சதவீதம் அதிகமாகும். இதன் பிரகாரம் 2006ஆம் ஆண்டில் சுமார் 56.300 புதிய எச்.ஐ.வி. தொற்றுக்கள் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஆண்டில் புதிதாக எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகியவர்களில் 53 சதவீதமானவர்கள், தன்னின சேர்க்கையாளர்களாவர்.

அதே சமயம் 24 சதவீதத்திலிருந்து 27 சத வீதம் வரையான அமெரிக்கர்கள், தமக்கு எயிட்ஸ் நோய் தொற்று ஏற்பட்டிருப்பதை அறியாதவர்களாக உள்ளதாக கூறப்படுகிறது. (அ-6)

# திருமண வாகனத்தின் மீது குண்டுத்தாக்குதல் மணமகன், மணமகள் உட்பட 10பேர் பலி

(கந்தகார்)

ஆப்கானிஸ்தானில் திருமண வைபவமொன்றுக்கு ஆட்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்று தெருவோர குண்டுவெடிப் புக்கு இலக்கானதில் மணமகன், மணமகள் உட்பட



10 பேர் பலியாகியுள்ளதுடன் 6 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கண்டஹார் மாகாணத்திலுள்ள ஸ்பின் போல்டக் பிரதேசத்தில் மேற்படி பஸ்சென்று கொண்டிருந்தபோது இடம்பெற்ற இவ்விபத்தில், பலியானவர்களில் சிறுவர்கள் பலர் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை என்ற போதும் தலிபான் போராளிகளே இதற்குக் காரணமென மாகாண பொலிஸ் அதிகாரி முதியுல்லா கான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதேசமயம் ஆப்கானிஸ்தானின் உருஸ்கான் மாகாணத்தில் இராணுவ வாக னங்கள் மீது போராளிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றையடுத்து நேட்டோ படையினரால் போராளிகளை இலக்கு வைத்து வான் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன் போது 12 பேருக்கும் அதிகமான போராளிகள் கொல்லப்பட்டனர். (அ-6)

# பதா ஆதரவாளர்களை இஸ்ரேல் காஸாவுக்குள் திருப்பி அனுப்பிவைப்பு

(இஸ்ரேல்)

பாலஸ்தீன பதா இயக்கத்தினருக்கும் எதிராளிகளான ஹமாஸ் இயக்கத்தவருக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட மோதல்களை அடுத்து வெளியேறியிருந்த பதா ஆதரவாளர்களை இஸ்ரேல் அதி காரிகள் காஸாவுக்குள் திருப்பியனுப்பத் தொடங்கியுள்ளனர்.

சுமார் முப்பது பேரை ஏற்கனவே காஸாவுக்குள்திரும்பியிருந்தனர் அவர்களைத் தடுத்து வைத்திருப்பதாக ஹமாஸ் கூறுகிறது. (அ-6)

# சோமாலிய தலைநகரில் தெருவோர குண்டு வெடிப்பில் 20 பேர் பலி; 40 பேர் காயம்

## இறந்தவர்களில் அநேகர் பெண்கள்

(மொகாடிஷு)

சோமாலியாவின் தலைநகர் மொகாடிஷுவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தெரு



வோர குண்டுவெடிப்பில் குறைந்தது 20 பேர் பலியாகியுள்ளதுடன் 40 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். பலியாகியவர்களில் அநேகர் பெண்களாவர்.

மேற்படி வீதியை சுத்தம் செய்யும் முகமாக பெண்கள் குழுவொன்று கூடிய போதே இக்குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இத்தாக்குதலுக்கு எவரும் இதுவரை உரிமை கோரவில்லை. மொகாடிஷுவில் எதியோப்பிய படையினருக்கும் இஸ்லாமிய போராளிகளுக்கும் இடையிலான மோதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதன் காரணமாக அங்கு பெரும் பதற்ற நிலை நிலவுகிறது. இதன் விளைவாக 1.5. மில்லியன் மக்கள் வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். (அ-6)

# இந்தோனேசியாவில் பறவைக் காய்ச்சலால் பலியானவர்கள் தொகை 111 ஆக உயர்வு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் பறவைக் காய்ச்சலால் 19வயது இளைஞன் ஒருவன் பலியாகியுள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் அந்நாட்டில் பறவைக் காய்ச்சலால் இதுவரை பலியானவர்களின் தொகை 111 ஆக உயர்ந்துள்ளது.

ஜகார்த்தாவின் மேற்கே தாங் கெரங்கிலுள்ள மருத்துவமனையொன்றில் மரணமடைந்த இந்த இளைஞனுக்கு எச் 5 என் 1 வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது அடையாளங்காணப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டிலிருந்து பறவைக் காய்ச்சலால் 15 நாடுகளைச் சேர்ந்த 385 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் 243 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தா பனம் அறிக்கையிட்டுள்ளது. (அ-6)

# வட இந்தியாவில் கோவிலில் ஏற்பட்ட உயிரிழப்பு 150 ஆக உயர்வு

வடஇந்தியாவில் இந்துக்கோயில் திருவிழாவில் ஏற்பட்ட சன நெருசலில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 150 ஆக உயர்வடைந்துள்ளதுடன், 100ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 50 குழந்தைகளும் அடங்குவதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

ஹிமாச்சலப் பிரதேசத்தில் பிலாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள நைனாதேவி கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் நவராத்திரா சிறப்பு பூசைக்காக சென்று கொண்டிருக்கையிலேயே இந்த சன நெருசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதையின் விளிம்பில் உள்ள தடுப்புச் சுவர் இடிந்து விழுவதாக கூட்டத்தினர் இடையே வதந்தி பரவியதாலேயே அங்கு சன நெருசல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## உலக தரிசனம்

இதேவேளை, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் படுகாயம் அடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் காயமடைந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும் வழங்குவதற்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. (அ-6)

# நவநாகரிக ஆடை அணிபவர்கள் வரிசையில் ஒபாமாவின் மனைவிக்கு இரண்டாமிடம்

உலகில் சிறந்த முறையில் ஆடை அணிபவர்கள் வரிசையில் அமெரிக்க ஜனநாயக கட்சியின் ஜனாதிபதிவேட்பாளர் பராக் ஒபாமாவின் மனைவி மிசெல்லி (44 வயது) இராண்டாம் இடத்தையும் பிரான்ஸ் ஜனாதிபதி நிகொலஸ் சார்க்கோஸியின் மனைவி கார்லா புரூணி மூன்றாம் இடத்தையும் சுவீகரித்துள்ளனர்.

நவநாகரிக நிறுவனமான வானிட்டி பெயார் ஆல் நடத்தப்பட்ட வாக்கெடுப் பொன்றின் பிரகாரமே இத் தெரிவுகள் இடம் பெற்றுள்ளன. அமெரிக்க பிரபல செல்வந்தர் டொனால்ட் திரும்பின் மகளான ஐவன்கா (26வயது) இத் தெரிவில் முன்னணியி லுள்ளார்.

அதேசமயம் பிரித்தானிய இளவரசர் வில்லியத்தின் காதலியான கேட் மிடில்டன் (26வயது) 4ஆம் இடத்தையும் நவநாகரிக உலகைக் கலக்கி வரும் சாரா ஜெசிக்கா பார்க்கர் 5ஆம் இடத்தையும் சுவீகரித்துள்ளனர். (அ-6)

# உலகின் முதலாவது இரட்டை கைகள் மாற்று சிகிச்சை -ஜேர்மனிய மருத்துவர்கள் சாதனை

6 வருடங்களுக்கு முன்பு விபத்தொன்றில் இரு கைகளையும் இழந்த விவசாயி ஒருவருக்கு, கைகள் மாற்று அறுவைச் சிகிச்சையின் மூலம் இறந்தவர் ஒருவரின் கைகளை பொருத்தி ஜேர்மனிய மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இரட்டை கைகள் மாற்று அறுவைச் சிகிச்சையொன்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளமை இதுவே உலகில் முதல் தடவையாகும். முனிச்தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவர்கள், 54 வயதான மேற்படி விவசாயிக்கு 15 மணித்தியால அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு இக் கரங்களை பொருத்தியுள்ளனர்.

இதற்காக மேற்படி அறுவைச் சிகிச்சைக்கு சிறிது நேரத்திற்கு முன்பு உயிரிழந்த இளைஞர் ஒருவரது கரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு 2003 ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவில் கையின் முன் பகுதியை மட்டும் இழந்த ஒருவருக்கு கரமாற்று அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது. ஆனால் தோள் பகுதிக்கு சிறிது கீழே கரங்கள் துண்டாக்கப்பட்ட ஒருவருக்கு கரமாற்று சிகிச்சை மேற்கொள்ளப்படுவது இதுவே முதற் தடவையாகும். எனினும் அறுவைச் சிசிக்சைக்கு உட்பட்வரால் உடனடியாக கையை அசைக்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந் நபரின் துண்டிக்கப்பட்ட கைப் பகுதிகளுக்கும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்குமிடையே தினசரி சுமார் ஒரு மில்லி மீற்றர் வரையில்நரம்புகள்வளர்ந்து இணைப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடே. அவரால் கையை அசைக்கக் கூடியதாக இருக்கும் என மருத்துவர்கள் கூறுகின்றனர். (அ-6)

# 14 ஆவது மாடியில் இருந்து விழுந்த 12 வயதுச் சிறுமி உயிர் பிழைத்தாள்

அமெரிக்காவைச் சேர்ந்த சிறுமி கிரேஸ் பெர்கெர் நியூயோர்க் நகரில் வசித்து வருகிறார். 12 வயதான இவர் நியூயோர்க் நகரில் உள்ள 14 அடுக்கு மாடி கட்டடத்தில் வசிக்கிறார் சம்பவத்தன்று தன் ஒன்று விட்ட சகோதரியுடன் கட்டடத்தின் கூரை பகுதிக்கு சென்றார் அங்கு உள்ள புகைக்கூண்டு அருகே இருந்த 25 அடிஏணிமீதுஏறி உச்சிக்கு சென்று அருகே ஓடும் ஹட்சன் நதியின் அழகை பார்த்து ரசிக்க முயன்றனர்.

அப்போது கால் தவறி கிரேஸ் புகைக் கூண்டுக்குள் விழுந்து விட்டார் இது பற்றி அவரது சகோதரி அவசரப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். உடனே பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்து சென்று புகைக் கூண்டின் அடிப்பகுதிக்கு செல்லும் இடத்தின் கதவை திறந்து பார்த்தனர். கிரேஸ் இறந்திருப்பார் என்ற எண்ணத்துடன் இருந்த அவர்களுக்கு ஆச்சரியம் அவள் உயிருடன் இருந்தது தான். அவர் உடம்பு முழுவதும் கரியாக இருந்தது. கீழே விழுந்ததில் அவரின் இடுப்பு எலும்பு முறிந்தது. (அ)

# கொழும்பு இந்துக்கல்லூரி

## க.பொ.த. உயர்தர முன்னோடிப் பரீட்சை

Pilot Examination

ஆனி 2008
June 2008

தமிழ்மொழியும் இலக்கியமும் - II

3 மணித்தியாலங்கள்
3 Hours

கவனிக்க:- * பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II, பகுதி III ஆகியவற்றுள் ஒவ்வொரு வினாவையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

* எழுத்துத் தெளிவில்லாதவிடத்தும் வழுவான மொழி நடைக்கும் புள்ளிகள் இல்லை.

### பகுதி I

(1) மேல் வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350-400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ) பேராசிரியர் க.கைலாசபதியின் தமிழ்ப்பணிகள்
ஆ) தமிழ் வளர்ச்சிக்கு அச்சு ஊடகங்களின் பங்களிப்பு
இ) எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஈ) இன்றைய விஞ்ஞான வியப்புகள்
உ) இலக்கியமும் அறிவியலும்
ஊ) கற்றனைத்தூறும் அறிவு

(2) பின்வரும் (அ) உரைப் பகுதியையும் (ஆ) செய்யுளையும் படித்து, அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) மனிதனுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் மனிதர்கள் பொருள் உற்பத்திப் பணியில் ஒருவரோடு ஒருவர் உறவு கொள்வதையே சமூக விஞ்ஞானிகள் உற்பத்தி உறவு என்கின்றனர். அது ஒருவருக்கொருவர் மனமார விரும்பி உதவி கொள்ளும் உறவாக இருக்கலாம். அல்லது ஒருவர் பிறிதொருவர் ஆணைக்குக் கீழ்ப்படியும் உறவாகவும் இருக்கலாம். எவ்வாறாயிருப்பினும் மனிதருக்கிடையே பொருள் உற்பத்தித்துறையில் உறவு ஏற்படுகிறது. இவ்வுறவே சமூக உறவாகவும் அமைந்துவிடுகிறது. இந்த அடிப்படையின் துணைகொண்டு பார்த்தால் நில மானிய முறையிலே பொருள் உற்பத்தி உறவானது நிலப்பிரவின் உடமையாக உற்பத்தி சாதனங்கள் அமைந்திருப்பதிலே தங்கியுள்ளது. உலகமெங்கும் நிலவிய நிலவிய நிலமானிய முன்றயை நன்கு ஆராய்ந்தவர்கள். நிலமானிய முறையானது மன்னர்கள் தமக்குப் பணி செய்தவர்களுக்கு (தொடக்கத்தில் போரில்) மானியமாகக் கொடுக்கும் நிலவுரிமையினையே குறிக்கும் என்பர். நிலத்தில் உழவுத் தொழில் செய்த பண்ணையாட்கள் அரசனிடம் இருந்து மானியம் பெற்ற பிரபுவின் ஆணைக்குள் இருந்தனர். ஆயின் அவர்கள் பிரபுக்களின் அடிமைகளாகக் கூறப்படவில்லை. சில தேசங்களில் பண்ணை அடிமைகள் வாங்கி விற்கப்படும் சரக்காகக்கணிக்கப்பட்டனர். எனினும் நில பிரபுத்துவ அமைப்பில் பண்ணையாட்கள், குடியானவர்கள் , நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்தனரே அன்றிப் பெரும்பாலும் அடிமைகளாக்கொள்ளப்பட்டவர்களல்லர். பழைய அடிமை நிலையிலிருந்து விடுபடுவதற்காகவே வியாபாரிகளுக்கு எதிராகவும் குழுத்தலைவர்களுக்கு எதிராகவும் அடிமைகள் போர் தொடுத்தனர்.

1. இப் பகுதியில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை உமது நடையில் 30 சொற்களுக்குள் சுருக்கி எழுதுக?
2. உற்பத்தி உறவு என்றால் என்ன?
3. பண்ணையாட்கள் பற்றி ஆசிரியர் கூறுவதை விளக்குக.

(3×3=9 புள்ளிகள்)

ஆ) பூத்தாலும் காயா மரம் உள; மூத்தாலும்
நன்கு அறியார் தாமும் நனி உளர்; பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்து உள ; பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு

1. இச் செய்யுள் கூறும் கருத்தை உமது உரை நடையில் 30 சொற்களுக்கு குறையாமல் விரித்து எழுதுக.
2. இச் செய்யுள் ஊடாகப் புலவர் எமக்கு எதனை உணர்த்துகிறார்?

(2×3=6 புள்ளிகள்)

(3) மேல்வரும் பதினைந்து வினாக்களுக்கும் (அ), (ஆ), (இ) என மூன்று பகுதிகளாகத்திரட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

அ) (i) இறக்கு, இரை, இனிப்பு, இடுப்பு, இளநீர், இச்சை ஆகிய சொற்களில் இகரம் இருவேறு ஒலிகளாக உச்சரிக்கப்படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டிற்கு ஏற்ப இச்சொற்களை இரு தொகுதிகளாக வகைப்படுத்துக.

(ii) தற்காலத் தமிழில் டகரம், றகரம் ஆகியவை முதலிலும் சொல் இறுதியிலும் இடம்பெறுவதற்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

(iii) ஆறு+ ஐ இரு வேறுவிதமாகப் புணர்வதற்கு இரண்டு உதாரண வாக்கியங்கள் தருக.

(iv) போனேன், ஓடினேன், ஓடியது, சென்றது ஆகிய சொற்களில் இடம்பெற்றுள்ள இறந்தகால இடைநிலைகளைத் தருக.

(v) ஆழி, ஆளி ஆகிய சொற்களின் பொருள் வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

ஆ) (i) காண், வா ஆகிய வினைச் சொற்கள் ஒவ்வொன்றின் அடியாகவும் பிறக்கும் இவ்விரு பெயர்ச்சொற்கள் தருக.

(ii) பின்வரும் வாக்கியத்தில் இடம்பெறும் வினையடைகளைக் குறிப்பிடுக.
நோய் படிப்படியாகத் தான் குணமாகும் என்று மருத்துவர் நோயாளியிடம் கூறினார்.

(iii) சுடுசோறு, சாரைப்பாம்பு, கதலிவாழை, எறிகயிறு, பாற்சோறு இவற்றுள் வினைத் தொகைகள் யாவை?

(iv) வேரல், ஊறல், சாரல், ஏறல் இவற்றுள் தொழிற் பெயர் விகுதிகள் இடம்பெறும் சொற்களை எழுதுக.

(v) ஆடு+அறுத்தது என்பதை விதிகூறிப் புணர்த்துக.

இ) (i) ஆழ நெடுந்திரை ஆறுகடந்திவர் போவாரோ? இதில் "ஓ" காரம் என்ன பொருளில் வந்துள்ளது?

(ii) பனை ஏறி விழுந்தான்
பனை ஏறி விழுந்தவனை மாடேறி மிதித்தது.
இதில் விழுந்தான் என்பதற்கும், விழுந்தவன் என்பதற்குமுள்ள வேறுபாடுயாது?

(iii) உள்ள மிளகாயா? இத்தொடரினை இனங்கண்டு பொருள் தரக்கூடியாகப் பிரித்துக் காட்டுக.

(iv) இனி, திணி, பனி, தணி, கனி இவற்றுள் ஏவல் வினையடிகள் யாவை?

(v) செய்தான், செய்வித்தான் ஆகிய சொற்களைப் பகுபத உறுப்புக்களாக பகுத்துக்காட்டுக.

(10×2=20 புள்ளிகள்)

### பகுதி II

(4) அ) சங்ககால அகத்திணை-புறத்திணை என்ற பாகுபாட்டிற்கான அடிப்படையினைச் சுருக்கமாகக் கூறுக.
ஆ) அகத்திணைப் பாடல்களின் தனித்துவப் பண்புகள் எனக்கூறப்படுபவை யாவை?
இ) அகத்திணைப் பொருள் மரபு பல்லவர் காலத்தில் எவ்வாறு கையாளப்பட்டது?

(5) அ) சங்கமருவிய கால இலக்கியங்களை அவை கூறும் பாடு பொருள்களுக்கேற்ப பட்டியற்படுத்துக.
ஆ) சங்க மருவிய காலத்தில் அறநூல்கள் பெருந்தொகையாக எழுந்தமைக்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை?

(15 புள்ளிகள்)

(6) அ) சோழப் பெருமன்னர்கால இலக்கியங்களை வகைப்படுத்தி விளக்குக.
ஆ) சோழர்காலத்தில் இலக்கியம் பெருவளர்ச்சியடைந்தமைக்கான காரணங்களை விளக்கி எழுதுக.

(15 புள்ளிகள்)

### பகுதி III

(7) (அ) பதினெட்டாம் நூற்றாண்டில் இலங்கையில் எழுந்த இலக்கியங்கள் பற்றி விளக்கிஎழுதுக.
ஆ) இலங்கை இலக்கிய வளர்ச்சிக்கு அச்சியந்திரம் ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

(8) (அ) இருபதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் கவிதையின் வளர்ச்சிப் போக்கினைத் தெளிவுபடுத்துக.
ஆ) 1980க்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட சமூக அரசியல் பிரச்சினைகள் இலங்கைத் தமிழ்க் கவிதையில் ஏற்படுத்திய செல்வாக்கினைப் பரிசீலிக்க.

(15 புள்ளிகள்)

(9) மேல்வருவோருள் யாரேனும் இருவர் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
அ) நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
ஆ) புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை
இ) மஹகவி உருத்திரமூர்த்தி
ஈ) சி.வை.தாமோதரம்பிள்ளை
உ) பேராசிரியர் வி.செல்வநாயகம்.

# இலங்கைப் படைநடவடிக்கை குறித்து இந்தியப் புலனாய்வாளர்கள் எச்சரிக்கை

இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் குறித்து இந்தியப் புலனாய்வாளர்கள், இலங்கையின் பாதுகாப்பு உயர்தரப்பை எச்சரித்துள்ளனர். "சார்க்" மாநாட்டுக்காக இலங்கை வந்திருந்த இந்தியப் புலனாய்வுத்துறையினர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

இலங்கையின் பாதுகாப்புத்துறை உயர்தரப்புடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இலங்கைத் தரப்பால் தற்போதைய யுத்தம் தொடர்பாகப் பெருமையாகப் பேசப்பட்டுள்ளது. தாம் கிளிநொச்சியைப் பிடித்து அங்கும் ஜனநாயகத்தை நிறுவப் போகிறோம் என இலங்கைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இதன் போது கருத்துரைத்துள்ள இந்தியப் புலனாய்வுத்துறை இலங்கைப் படையினர் தமது தாக்குதல்களையும் முனைப்புகளையும் குறைப்பதே சிறந்தது என அறிவுரை வழங்கினர். தமிழீழ விடுதலைப் புலிகள் புதுவகையான ஆபத்தான தாக்குதல் ஒன்றை நடத்துவதற்குரிய ஏதுநிலைகள் இருப்பதாகவும் எச்சரித்துள்ளனர்.

எனவே அதற்குப் பின்னர் இந்தியாவின் உதவியைக் கோருவதில் எவ்வித பயனும் இல்லை என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்தக் கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பில் சந்தித்தபோதும் தெரிவித்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் போது தமிழீழ விடுதலைப்புலிகள் பலவீனம் அடைந்து விட்டார்களா? என இந்தியப் பிரதமர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் வினாவியுள்ளார். அதற்குப் பதிலளித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த விடயம் குறித்து எங்களைக் காட்டிலும் உங்களுக்கே அதிகமாகத் தெரிந்திருக்கும் எனத் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் இலங்கைப் படையினர் இந்த யுத்தத்தில் வெற்றி பெறமாட்டார்கள் என இந்தியப் பிரதமர் சிரித்துக்கொண்டே குறிப்பிட்டுள்ளார். இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன், இந்தியப் பிரதமரிடம் சில விடயங்களைப் பயமின்றி சுட்டிக்காட்டியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியா இதுவரை காலமும் இலங்கைத் தமிழர்களை ஏமாற்றியுள்ளது. இந்தியாவே இலங்கையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு உதவியது அதே இந்தியாவே இன்று அந்தப் போராட்டத்திற்கு எதிராகவும் செயற்படுகிறது எனச் சம்பந் தன் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர்கள் நசுக்கப்படுவதை இந்தியா அனுமதிக்காது

இதற்கிடையில் இந்தியப் பிரதமருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் குழுவுக்குமிடையில் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்தியப் பிரதமர் வெளியிட்டதாகக் கூறப்படும் கருத்துக்களையும் இராஜதந்திரத் தரப்புகள் கவனத்தில் கொண்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் விடுவித்ததாகக் கூறுகிறது. இந்தச் செய்தியை அடுத்து இலங்கையில் உள்ள தமிழர்கள் இரண்டாம் பட்சப் பிரஜைகளாகவே அரசாங்கத்தினால் கருதப்படுகின்றனர். இந்த நிலையில் வடக்கையும் படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் இலங்கையில் தமிழர்கள் வாழமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்குப் பதிலளித்த இந்தியப் பிரதம மந்திரி மன்மோகன் சிங் வடக்கைக் கைப்பற்றுவதன் மூலம் தமிழர்கள் நசுக்கப்படுவார்களானால் அதனை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராகத் தமிழர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தியப் பிரதமரிடம் முன்வைத்துள்ளது.

தற்போது இலங்கையில் உள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகர் மாணிக்கம் இடமாற்றலாகிச் செல்லும் நிலையிலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும் தகவல் அறிந்த தரப்புகள். இன்னும் 5 வருடங்களில் மாணிக்கம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படுவார் எனத் தெரிவித்துள்ளன. (அ-6)

# ஆயுததாரிகளின் தாக்குதல்களில் நால்வர் பலி; ஐவர் படுகாயம்

(கொழும்பு)

வெல்லம் பிட்டிய, ஊறுபொக்க மற்றும் வெல்லாவ ஆகிய மூன்று பிரதேசங்களில் ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் நால்வர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

கூரிய ஆயுதங்களால் தாக்கியும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுமே இப்படு கொலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமாகிய ரஞ்சித் குணசேகர தெரிவித்தார். இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச் சாளர் தொடர்ந்தும் கூறியதாவது, வெல்லம் பிட்டிய, மாதின்னா கொட பகுதியில் இடம் பெற்ற கோஷ்டிமோதல் ஒன்றின் போது இரு வர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஐவர் படு காயம் அடைந்துள்ளனர் .

சம்பவத்தில் படுகாயமடைந்த ஐவரும் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாதின்னாக் கொட முதலாம் ஒழுங்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது இரு தரப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட விரோதம் காரணமாக இடம் பெற்ற மோதலின் போது இருவர் கொல்லப் பட்டதுடன் மேலும் ஐவர் படுகாயமடைந்துள்ளனர். சம்பிக்கதுமிந்த (29வயது) மற்றும் டபிள்யூ. டபிள்யூபிரியந்த, (20வயது) ஆகிய இருவருமே சம்பவத்தின் போது கொல்லப்பட்டுள்ளனர் சம்பவம் தொடர்பில் வெல்லம்பிட்டிய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, ஊர்பொக்க ரொட்டம்பே பகுதியில் இனம் தெரியாத ஆயுததாரிகள் சிலர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். தனியார் பஸ் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது பஸ்ஸிற்குள்புகுந்த ஆயுததாரிகள் சிலரே குறித்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தைமேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்தில் ஊரு பொக்க பிரதேசத்தைச் சேர்ந்த கொடிப்பிலிகே நிஷாந்த (28வயது) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

மேலும் வெல்லாவ சியம்பலா வெவ தம்பகல பகுதியில் கூரிய ஆயுதங்களால் தாக்கி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் இச்சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (அ-6)

## ஜே.வி.பி. செயற்பாட்டாளர்கள் கட்சியை விட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

ஜே.வி.பியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் கட்சியை விட்டு வெளியேறியுள்ளதாக சிலுமின வார இதழ் செய்தி வெளியிட்டுள் ளது.

ஜே.வி.பி.கட்சியின் பிழையான தீர்மானங்கள் பாதுகாப்பு படையினரை விமர்சித்தல் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு அளித்தல் போன்ற காரணிகளால் உறுப்பினர்கள் விரக்தியடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத்தேர்தலில் ஜே.வி.பி உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கவுள்ளதாக சிலுமின செய்தி வெளியிட்டுள்ளது. (அ-6)

## ஐரோப்பிய ஒன்றிய கொழும்புக்கிளை அதிகாரிகளை பணி நீக்கத் திட்டம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்புக் கிளையில் பணியாற்றுவோர் பக்கச் சார்பாகச் செயற்படுவதாகவும், அவர்களைப் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரேரணை வெகுவிரைவில் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இருதின வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த கிளைக் காரியாலயம் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தின் கொள்கைகளுக்குப் புறம்பான வகையில் செயற்படுவதனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றப் பிரதிநிதி நெரஞ்சன் தேவாதித்ய தெரிவித்துள்ளார். (அ-5)

## வாடகைக் காரில் ஹோட்டலுக்குச் சென்ற இந்திய பாதுகாப்பு ஆலோசகர்

(கொழும்பு)

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனுக்கு கடந்த சனிக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வாயிலில் பெரும் அதிர்ச்சி காத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு ஏற்பாடுகளில் நிலவிய தவறே இதற்கு காரணமாகும். சார்க் மாநாடு முடிவடைந்த கையோடு தெற்காசி தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் தாங்கள் தங்கியிருந்த 5 நட்சத்திர விடுதிகளைச் சென்றடைந்துவிட்டனர்.

இருந்த போதிலும் இந்திய பாதுகாப்பு ஆலோசகரான எம்.கே. நாராயணன் மாத்திரம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வாசலில் காத்து நின்றுள்ளார்.

தனது காருக்கும்-அதற்கு பாதுகாப்பாக வரும் வாகனத்தொடர் அணிக்குமாகவே அவர் அங்கு காத்துநின்றுள்ளார்.எனினும் எதுவுமே வந்து சேரவில்லை.

இந்நிலையில் தாஜ்சமுத்திரா என்ற இலட்சணையுடன் கூடிய வாடகைக்கார் ஒன்று அங்கு ஓடித்திரிவதைக்கண்டு அந்த சாரதியை அணுகி தன்னை ஹோட்டல் விடுதியில் கொண்டுசேர்க்குமாறு கேட்டுள்ளார்.

இதேவேளை வீதிகள் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்த போதிலும் குறித்த காரில் தாஜ் சமுத்திரா இலட்சனை பதித்திருந்ததன் காரணமாக ஒருவாறு அது ஹோட்டலை சென்றடையக்கூடியதாக இருந்தது.

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் இறுதியில் எந்தவித பாதுகாப்பும் இன்றி வாடகைக்காரில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கையில் ஏற்பட்ட தவறு இந்திய அதிகாரிகளை மிகவும் அதிருப்திய டையச் செய்திருக்கும் என்பதை கூறவேண் டிய அவசியம் இல்லை என்று சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது.

அத்துடன் பாதுகாப்பு நடவடிக்கையீல் ஏற்பட்ட இந்த தவறு தொடர்பில் எம்.கே. நாராயணனிடம் குறித்த பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரி நேரில் சென்று மன்னிப்பு கோரியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## உயர்தரப்பரீட்சை நாளை ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர் வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகள் 6ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண தேர்தல்களை முன்னிட்டு இந்த பரீட்சைகள் இரண்டு கட்டங்களாக நடாத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 6ஆம் திகதி ஆரம்பமாகும் பரீட்சைகள் 21ஆம் திகதி வரை முதற்கட்டமாக நடைபெறும். அதேவேளை இரண்டாம் கட்ட பரீட்சைகள் எதிர் வரும் 25ஆம் திகதி ஆரம்பித்து செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதியுடன் நிறைவடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகளுக்கு நாடளாவிய ரீதியாக 2இலட்சத்து 93 ஆயிரத்து 819 பரீட்சாத்திகள் தோற்றவுள்ளனர். இதில் பாடசாலை பரீட்சாத்திகளாக 1இலட்சத்து 99ஆயிரத்து 62பேரும் தனிப்பட்ட பரீட்சாத்திகளாக 94ஆயிரத்து 757பேரும் தோற்றவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார். (அ-6)

## ஆழ்கடலில் மீன் அதிகமுள்ள இடங்களை கண்டறிய செய்மதி தொழில் நுட்பம்

### நாரா அமைப்பு ஆராய்வு

(கொழும்பு)

செய்மதி தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஆழ்கடலில் மீன்கள் அதிகமுள்ள இடங்களை கண்டறியும் திட்டம் வெற்றியளித்துள்ளதாக நாரா அமைப்பு தெரிவிக்கின்றது.

இதன் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளை ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக நாரா நிறுவனத்தின் ஆய்வு தொடர்பான அதிகாரி ஜெகத் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

செய்மதி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கடல் வளங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது. கடலின் வெப்ப அளவு , மீனின் வருகை போன்றவற்றை அறிந்த பின்னர் இது தொடர்பாக தீர்மானம் ஒன்றை மேற் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் பெறப்படுகின்ற தகவல்களை மீனவ சமூகத்திற்கு அறிவிக்கும் பொருட்டு வானொலி தகவல் சமிக்ஞை தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் நாரா நிறுவனம் தீர்மானித்துள்ளது.

செய்மதி தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஜப்பான் , சீனா , அமெரிக்கா ஆகிய நாடுகள் வெற்றிகரமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விகாரையில் வைத்து இளம் பெண்ணுடன் வல்லுறவு கொண்ட பிக்குவுக்கு பிணை

(கொழும்பு)

இளம் பெண் ஒருவரை வல்லுறவுக்கு உட்படுத்திய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பௌத்த பிக்கு ஒருவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

10ஆயிரம் ரூபா சரீர பிணை மற்றும் இரண்டு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையின் அடிப்படையில் குறித்த பிக்கு விடுதலை செய்யப்பட்டுள்ளார். கலுவெல்ல வனரதன தேரர் என்ற பௌத்த பிக்குவே இந்த அசம் பாவிதத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் கற்கை நெறியொன்றைக் கற்பதற்காக சென்றிருந்த வேளையில் நட்புறவை ஏற்படுத்திக் கொண்ட பௌத்த பிக்கு, இலங்கையில் ஓர் விஹாரையில் வைத்து குறித்த இளம் பெண்ணை வல்லுறவிற்கு உட்படுத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-6)

## ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளினால் ஜனநாயக முறைமை வலுவிழந்துள்ளது

### பிரித்தானிய வெளியுறவு பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஜனநாயக முறைமை காணப்படுகின்ற போதிலும் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் அதனை வலுவிழக்கச் செய்துள்ளதாகப் பிரித்தானிய வெளியுறவு துறை பிரதி அமைச்சர் மிலோச் பிறவுண் பிரபு குறிப்பிட்டுள்ளார். 20வருடங்களுக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

எனினும் அவற்றின் நியாயத்தன்மை குறித்து சந்தேகம் நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, குறிப்பாக எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைத் தேர்தல்களின் போது இந்த நிலைமைகள் கவனத்தில் கொள்ளப் பட வேண்டும். சிறுவர் போராளிகளை இயக்கத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பான பிரச்சினை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஜனநாயக வியூகத்திற்குள் பிரவேசித்ததன் பின்னர் அதற்கான அர்ப்பணிப்பை அனைத்து தரப்பினரும் வெளிப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் ஊடக அடக்குமுறை பெரும் கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-6)


இல்லற வாழ்வில் 25 ஆண்டு நிறைவு



அருணாசலம் – இராசலட்சுமி தம்பதி

இல்லறம் எனும் இனிய வாழ்வில்
இணைந்து இன்று வெள்ளி
விழாக் காணும் அன்புத்தெய்வங்களை
இன்னும் பல ஆண்டு வாழ்க வாழ்க என
வாழ்த்தி நிற்கிறோம்.

மயூ, சுமதி, வித்தியா
மயூரதி, செந்தீபன்

(1509)

உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பது அன்பாலும் ஒழுக்கத்தாலும் தெய்வ பக்தியாலும் தான்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

## நல்லூர்க் கந்தனின் மகோற்சவத்தில் தெய்வீகம் பேணுவோம்

நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவம் நாளை 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

கந்தப் பெருமானின் மகோற்சவம் என்றால் உலகெங்கும் வாழும் ஈழத்து சைவத் தமிழர்களிடையே தெய்வீகப் பொலிவு ஏற்பட்டுவிடும்.

கந்தனின் திருக் கடாட்சம் வேண்டி விரதமிருப்போர், அங்கப் பிரதட்சணம் செய்வோர், காவடி எடுத்து நேர்த்திக் கடன் முடிப்போர், கந்த சஷ்டி கவசம் பாடி துதி செய்வோர் என எங்கும் பக்திப் பரவசம் சூழ்ந்து கொள்ளும்.

இத்துணை தெய்வீகப் பொலிவுக்குக் காரணம் என்ன என்பதை தவத்திரு யோகர் சுவாமிகள் 'பஞ்சம் பசி வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி' என்ற பாடல் வரிகள் மூலம் எடுத்தியம்பியுள்ளார்.

ஈழத்தமிழர்கள் எத்துணை துன்பத்தை அனுபவித்தபோதிலும் அவர்கள் இன்றுவரை மனம் தளராது, மானிடம் காத்து வாழும் பக்குவத்தினராய் உள்ளனரெனில் அதற்கு நல்லூர்க் கந்தப் பெருமானின் அருளாட்சியே காரணம் எனலாம்.

இதனால் அன்றோ இலட்சோப இலட்ச மக்கள் நல்லூரை நாடி ஓடி வருகின்றனர்.

மகோற்சவ காலத்தில் வீதியுலா வரும் கந்தப் பெருமானின் திவ்ய திருமுகத்தை ஒருகணம் கண்டுவிட்டால் அந்த வருடம் முழுவதுமே ஆனந்தம் பொங்கும் என்ற உண்மையின் உணர்வினால் நல்லூர்க் கந்தனிடம் பக்தர்கள் வந்து குவிகின்றனர்.

இவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் பலரும் முன்வரும் பாங்கு அற்புதமானது.

தண்ணீர்ப்பந்தல் அமைத்து தாகசாந்தி செய்வோர், அன்னசத்திரம் அமைத்து அமுதளிப்போர், அடியவர் இளைப்பாற வீதியெங்கும் கொட்டகைகள் நாட்டி உதவுவோர் என அடியவர் நலன் பேணும் பணிகள் நல்லூர்க் கந்தனின் மகோற்சவக் காலத்தில் எழுச்சி பெறும்.

இதற்கு மேலாக சுற்றுப் புறச் சூழலின் சுத்தம் பேணுவதில் நித்திரை கொள்ளாது கருமமாற்றும் யாழ்.மாநகர சபை என எல்லாமே நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவத்திற்கு பெருமை சேர்க்கின்றன.

இத்தகைய பெருமைக்கும், தெய்வீகத்திற்கும் இருப்பிடமாக அமைந்த நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவம் சிறப்பாக நடைபெற எல்லோரும் ஒத்துழைப்பு வழங்குவதுடன்,

குறிப்பாக இளைஞர்கள் பொறுப்புணர்ந்து ஆலய சுற்றுச் சூழலில் தெய்வீகத் தன்மையைப் பேண முன்வரவேண்டும்.

இதற்கு மேலாக நல்லூர் மகோற்சவம் சிறப்புற நடைபெறுவதற்கு படைத்தரப்பும் இட்டல் இடைஞ்சல் செய்யாது ஒத்துழைக்க வேண்டுமென்பது பக்தர்களின் வேண்டுதல் ஆகும்.

# விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் கிருஷ்ணநீதன் மதுரையில் கைது!-தமிழகபொலிஸ்

(சென்னை)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர் எனக்கூறப்படும் கிருஷ்ணநீதன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

மதுரை மாவட்டத்திலுள்ள உச்சப்பட்டி அகதிகள் முகாமில் வைத்து இவர் கைது செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சுவிஸ்லாந்தில் தயாரிக்கப்பட்ட போக்கிரோக்கிகள், ஜிபிஎஸ் கருவிகள், மின்கலங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் இலங்கைக்கு கடத்தப்பட விருந்த நிலையில் கடந்த 30ஆம் திகதி 4 இலங்கையர்கள் உப்பூர் என்ற இடத்தில் கைது செய்யப்பட்டனர்.

இதனை அடுத்து அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் கிருஷ்ண நீதன் கியூ பிரிவு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கு பொருட்களை கடத்துவதில் இவர்களுக்கு உதவியதாகக் கூறப்படும் இராமநாதபுரத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவரை தேடி வருவதாகவும் தமிழக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (அ-6)

# அதிகாரங்களை மட்டுமல்லாது அனுகூலங்களையும் பகிர்ந்தளிக்க அரசாங்கம் முற்படுகிறது

## அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அதிகாரத்தை மட்டுமல்லாது அனுகூலங்களையும் பரவலாக்க செயற்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.



சுமார் 120 கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உப கரணங்களை நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் முகமாக சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அனுகூலங்களைப் பரவலாக்குவதன் மூலம் நாட்டு மக்களுக்கு ஆரோக்கியமான சுகாதார சேவையை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் அதிகாரத்தை மட்டும் பகிந்தளிப்பது பலனில்லை எனவும் நிமல் சிறி பாலடிசில்வா குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு நடவடிக்கையின் போதும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை ஒருபோதும் அரசாங்கம் மறக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

# கைத்தொலைபேசிகளுக்கு 2%வரி ஓகஸ்ட் 15 முதல் அறிமுகம்

(கொழும்பு)

கைத்தொலைபேசிகளுக்கு, ஓகஸ்ட் 15ஆம் திகதி தொடக்கம் 2சதவீத சூழல் வரி விதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இவ்வரி அனைத்து கைத்தொலைபேசிகளுக்கும் விதிக்கப்படும். தொலைத் தொடர்புக் கோபுரங்கள் மற்றும். 40 வாற்றுக்கு கூடு தலான மின் குமிழ்க ளுக்கும் ஏற்கனவே ஓகஸ்ட் 1ஆம் திகதி முதல் இவ் வரி அறவிடும் பணி நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொலைக்காட்சி, வானொலி, மற்றும் தொலைத்தொடர்பு சார்ந்த கொம் பனி கள் வருடந்தம் ரூபா 50ஆயிரம் செலுத்த வேண்டும் பங்காளர்கள் ரூபா 25ஆயிரம் செலுத்த வேண்டும்.

40 வாற்றுக்கு அதிகமான மின் குமிழ்களுக்கு ரூபா 3உம் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 300 இலிருந்து ரூபா 400 வரை அறவிடப்படும்.

இதன் மூலம் பெறப்படும் நிதி சூழல் பாதுகாப்புக்கு பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தலை முடிவுக்கு கொண்டுவருமாறு கோரிக்கை

## பதினொரு எதிர்க்கட்சிகள் கூட்டாக விடுப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தலை முடிவுக்குக் கொண்டு வரக்கோரி, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன. பதினொரு எதிர்க் கட்சிகள் ஒண்றிணைந்து வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில், ஊடக வியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, மேலக மக்கள் முன்னணி ,லங்கா சமசமாஜக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் பிரிவு, மலையக மக்கள் முன்னணி, சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய சோசலிசக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஜனநாயக இடதுசாரி முன்னணி, இடதுசாரி முன்னணி ஆகிய எதிர்க்கட்சிகளே இந்த அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

ஊடக சுதந்திரம் என்பது வலுவான ஜனநாயகத்திற்கு அத்தியாவசியமானது என இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சுதந்திரமானதும் தொழில் முறை ரீதியிலுமான ஊடகமானது அரசாங்கத்தினதோ ஏனைய குழுக்களினதோ தலையீடுகளின்றி இயங்கக் கூடியதாக இருக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கையில் சமூக அரசியல் கலாசார மற்றும் பொருளாதார முன் னேற்றத்திற்கும் ஜனநாயக ஆட்சிக்கும் ஊடகம் முக்கிய பங்குவகிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், இலங்கையில் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் இன்று கொலைகள், கடத்தல்கள், தாக்குதல்கள், கைதுகள், தடுத்துவைப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு வருடங்களுக்கும் மேலாக ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிராகத் தொடரும் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் தவறிவிட்டது எனவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஊடகவியலாளர்களுக்கு எதிராக பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டிருந்த கருத்துக்களைச் சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கையில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தைச் சேர்ந்த சனத் பாலசூரிய, போத்தல ஜயந்த ஆகியோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டமையானது ஏற்றுக்கொள்ள முடியாத செயல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எதுவித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாத நிலையில் 135 நாட்களுக்கும் மேலாக ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் தடுத்துவைக்கப்பட்டுள்ளதையும் இந்த அறிக்கை கண்டித்துள்ளது.(அ-6)

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஓலைச் சுவடிகள் 71

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

## அரணை கடித்தால் மரணம் நிகழுமா?

அரணை கடித்தால்உடன்மரணம் என்று ஒரு நம்பிக்கை பண்டைக் காலத்தில் இருந்து வந்தது . வளையிலிருந்து தலையை மட்டும் நீட்டும் அரணையின் கழுத்து வரையுள்ள பாகம் மட்டுமே வெளியில் தெரியும்என்றதால் ஏதாவது விஷப்பாம்பாக இருக் கும் என்று தவறாக புரிந்து கொள்வதுண்டு.

விஷம் தீண்டுவதால் வரும் மரணங்களில் பெரும்பான்மையானதும் பயத்தினால் நிகழ்கின்றன என்பது நிஜம். அரணை கடித்தால் மரணம் என்ற நம்பிக்கையிலிருந்து யாராவது அதிக பயத்தினால் வந்த இருதய நோயால் இறந்து போயிருக்கலாம். இது போன்ற நிகழ்வுகள்இந்த நம்பிக்கையை உறுதி செய்யுமாறு அமைந்திருக்கலாம் என்று ஒரு விஷசிகிச்சை நிபுணர் கூறியிருக்கின்றார்.

இந்த தகவலை பலர் கையில் வந்து சேர்ந்து நாளடைவில் அரணையை ஒரு விஷப் பிராணியாகக் காணத்தொடங்கினர் என்று நம்புவதில் தவறவில்லை.

எப்படியும் அரணை எப்போதாவது தான் கடிக்கும் என்றும், கடிக்க நினைத்து வந்தா லும் ஆளுக்கருகில் வரும் போது மறந்து திரும்பிவிடும் என்றும் கருதுகின்றனர். கடிக்க உத்தேசித்தநபர் அல்ல என்று புரிந்து கொண்டு தான் திரும்பச் செல்கின்றது என்றும் ஓர்நம்பிக்கை உண்டு. இந்த மறதியின் கதையை வைத்து சில நபர்களை அரணை புத்தியுடையவன் என்று கூறுவதுண்டு. சில அரணைகளின் இரு பக்கங்களிலும் காணும் நிறம் விஷம் சேகரித்து வைத்திருப்பதாக பலரும் கருதுகின்றனர் ஆனால் அரணை விஷமில்லாத ஓர் சாதுவான பிராணி என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

அரணையின் இரு பக்கங்களிலும் காணப்படும் சிவப்பு கலந்த மஞ்சள் நிறம் இனவிருத்தியில் காயத்தில் ஆண் அரணையில்மட்டுமே காணப்படும் இதற்கும் விஷத் துக்கும்சம்பந்தமில்லை.

# உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள

# "ஆரோபிக்ஸ்" ...

உலகெங்கிலும் தற்போது பிரபலமாகி வரும் "ஆரோபிக்ஸ்" பயிற்சிக் கலை பற்றி, ஆரோபிக்ஸ் பயிற்சியாளர் திருமதி ராணி அளித்த செவ்வி.

◆ *உடற்பயிற்சிக்கலைக்ளில் பிரபலமாகி வரும் ஆரோபிக்ஸ் கலை குறித்து தங்கள் கருத்து?*

பிராண வாயு உட்கொள்ள மேற்கொள்ளப்படும் உடற்பயிற்சி கலையே "ஆரோபிக்ஸ்" இடைவெளியற்ற முறையில் நடனப்பயிற்சிகளையும் தன்னுள் வாங்கி இக்கலை செயல்படுகிறது. யோகாவைப் போன்று வரையறுக்கப்பட்டமுறை இல்லை.



யோகாவில் ஒவ்வொரு செயல்முறையும் மெதுவாகக் கையாளப்படும். "ஆரோபிக்ஸ்" உடற்பயிற்சிக் கலையில் ஒவ்வொரு செயல் முறையும் மிக வேகமாக நடனத்தைப் போன்று செயல்படுத்தப்படும்.

ஆரோபிக்ஸ் நோக்கப்பட வேண்டிய கோணமே வேறு. நடனத்துடன் வேகமாக இடைவெளியற்ற முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய உடற்பயிற்சி.

நெகிழ்வுத் தன்மை கொண்டது. புதிதாக ஒரு நடன அடியை இதில் சேர்த்துக் கொள்ளலாம். யோகா அவ்வாறானதல்ல. சாஸ்திரப்படி வரையறுக்கப்பட்டது. சரியான வகையில் யோகா பயிற்சியை மேற்கொள்ளாவிட்டால் நிச்சயமாக பக்க விளைவுகளை ஏற்படுத்துமென்பது வல்லுநர்கள் கருத்து. ஆரோபிக்ஸ் பயிற்சி பெறும் மாணவர்கள் குறைந்த பட்சம் 40 நிமிடங்கள் இடைவெளியற்ற நடனத்தை மேற்கொள்ள வேண்டும். அதனை வெகு வேகமாகப் பயிற்சியளிக்க வேண்டும். எனக்கு யோகா பயிற்சியளித்த ஆசிரியர் பயிற்சி மேற்கொள்ளும் போது பேசுவதைக்கூட தவிர்த்துள்ளார்.

◆ *பயிற்சி பெறுபவர்கள் எம் மாதிரியான உணவு வகைகளை எடுத்துக் கொள்வது நலம் பயக்கும்?*

வேக வைத்த காய்கறிகள் உடலுக்கு மிகவும் நல்லது. காய்கறிகளை உட்கொண்டு சாதத்தை குறைத்தல் நலம். சாதம் அதிக அளவில் சாப்பிடும்போது அதில் உள்ள கார்போஹைட் ரேட்ஸ் உடலுக்கு தீங்கான விளைவுகளை ஏற்படுத் துகின்றது. உடல் பருமனில் நடுத்தரமாக மெலிந்து இருப்ப வர்களை விட உடல் பருமனாக இருப்பவர்கள் மெலிய நினைத்தால் உணவுக் கட்டுப்பாட்டு முறை தவிர்க்க முடியாதது. பொதுவாக 45 வயதிற்குட்பட்டவர்கள் தங்கள் உடல் மெலிவதற்காக மேற்கொள்ளும் உணவுக்கட்டுப் பாடு முறைகளும் உடற்பயிற்சி முறைகளும் முழுமையாக பலன் அளிக்கும் என்று கூற இயலாவிட்டாலும் ஏற்கனவே இருந்த உடலை நோயின்றிப் பாதுகாக்கலாம் எனக்கூறலாம்.

◆ *இருதய நோய்த் தடுப்பு பயிற்சி (Cardiology Steps) என்றால் என்ன ?*

இருதய நோய்த் தடுப்புப்பயிற்சி என்பது அந்நோய் வராமல் தடுப்பதற்காக மேற்கொள்ளும் உடற்பயிற்சி முறை படிபோன்று தோற்றம் அளிக்கும் (Stepper) என்ற உடற்பயிற்சி உபகரணத்தின் உதவியால் இப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும் .இவ்வுவகரணத்தின் மீதுஏறி ஆடி உடற்பயிற்சி மேற்கொள்ளும் போது இருதயத் துடிப்பு அதிகமாகி ஒக்சிசனை இருதயம் அதிகமாக உள்வாங்கிக் கொள்கிறது. இதன் அடிப்படையில் இது இருதயத்துக்குச் செல்லக்கூடிய இரத்தம் மிகச் சீராகச் செல்லும். இதன்மூலம் பலர் பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

◆ *ஆரோபிக்ஸ் உடற்பயிற்சியில் கையாளப் படும் மற்றப் பயிற்சிகள் எவை?*

தரைப்பயிற்சி (Floor Exercise) நின்று மேற்கொள்ளும் பயிற்சி(Standing Exercise) உட்கார்ந்து மேற்கொள்ளும் பயிற்சி (Sitting Exercise) ஆகியவையும் உண்டு. இது தரைப்பயிற்சி மற்ற உடற்பயிற்சி முறைகளின் முற்றிலும் மாறுபட்டது. மற்ற உடற்பயிற்சிகளில் நின்றோ உட்கார்ந்தோ தரையில் சாய்ந்தோ தரைப் பயிற்சிகளை மேற்கொள்வார்கள். ஆரோபிக்ஸை பொறுத்த மட்டில் தரைப்பயிற்சி என்பது முழுக்க தரையிலேயே சாய்ந்தே மேற்கொள்வார்கள். சாய்ந்திருந்தபடியே கை கால்களை அசைத்தோ இசைக்கேற்ப அசைவுகளை மாற்றுவது தான் தரைப் பயிற்சி. இப் பயிற்சியில் வயிற்றுத் தசை நார் குறைவதற்கு வாய்ப்புண்டு.

நின்று மேற்கொள்ளும் பயிற்சியில் பெரும்பாலும் கவனம் செலுத்த வேண்டியவர்கள் திருமணமான பெண்களே. வடிவம்(Shape) சீராக வேண்டுமென்ற சிந்தனை பெரும்பாலும் அவர்களுக்கே உரியது. இப் பயிற்சி மேற்கொள்வதன் மூலம் அவர்களுக்கு தொடை பருமன் குறையும். உட்கார்ந்து மேற்கொள்ளும் பயிற்சி முழுக்க உட்கார்ந்தபடியே நடன அசைவுகளுக்குத் தகுந்தவாறு ஆரோபிக்ஸ் பயிற்சி மேற்கொள்வதைக் குறிக்கும். இதில் தோள் பட்டை, தொப்பையான வயிறு, தொடை பருமன் ஆகியவை குறையும். தொடர்ந்து ஆய்வு செய்து வரும் நான் பயிற்சி பெற வருகின்றவர்களை நோக்கும் விதமே வேறு. வயிறு பெரிதாக இருப்பது, தொடை பருமனாக இருப்பது போன்றவை தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி விடும். நாடும் நபர்களின் பிரச்சினைக்குத் தக்கவாறு உடற்பயிற்சி மாறுபடும்.




◆ *உங்கள் மாணவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?*

முதலில் என் மாணவிகளிடம் நான் அடிக்கடி உபயோகிக்கும் வார்த்தை Water is the Universal Solution குடிநீரே உலக நிவாரணி அல்லது உலக நோய்களுக்கான நிவாரணி. சைவ உணவுகளை உண்டால் ஜீரணமாவது எளிது அல்லது ஜீரணப் பிரச்சினை அண்டாது. ஆனால் அசைவம் உண்ணும் போது எளிதில் ஜீரணமாவது இல்லை .சைவம் உண்ணும்போது உடலுக்குத் தேவைப்படும் குடிநீரின் அளவைவிட அசைவம் உண்ணும்போது உடலுக்கு அதிக அளவு குடிநீர் தேவைப்படும். அப்போது தான் அசைவம் எளிதில் ஜீரணமாகும். தாகம் எடுக்கும் போது மட்டும் நீர் அருந்துவதை ஓர் வழக்கமாக மேற்கொள்ளாமல் சாதாரணமாகவே அஃகளவு குடிநீர் உட்கொள்வது நல்லது .குடிநீர் சர்வரோக நிவாரணி என்பது சித்தர் கருத்தே. உருளைக்கிழங்கு மற்றும் பூமிக்கடியில் விளையும் பல்வேறு கிழங்கு களைப் பொரித்து உண்பதால் இம்முறை பொருந்தும். மலச்சிக்கலுக்கு குடிநீரே சிறந்த மருந்து.

வெளிநாட்டினரைப் போன்று குறைந்த உணவு வகையுடன் Salad எனச் சொல்லப் படும் பழங்கள் உணவு இறுதியில் உண்ணும் வழக்கம் நம்மிடம் குறைவு. எனவே அஜீரணத்துக்கு மற்றும் ஆரோக்கியத்துக்கு நீரை நாடுவதில் தவறு இல்லை.

◆ *ஆரோபிக்ஸ் நடனம் மாதிரியான ஓர் கலை என்று கூறியிருந்தீர்கள் ஆரோபிக்ஸுக்கு பதிலாக பரதம் போன்ற ஓர் நடனக் கலையை கற்றுக் கொள்ளலாமே?*


மிகச் சரியான கேள்வி ஓர் விஷயத்தைக் கூறினால் நீங்களே ஆச்சரியப்படக்கூடும். என்னிடம் ஆரோபிக்ஸ் பயில வரும் மிகக் குண்டான பெண்கள் முன்பு பரத நாட்டிய கலை பயின்றவர்களே. பரதத்தில் அபிநயம் செய்யும் போதும் சில முக்கியமான வரிகளை பார்வையாளர்களுக்கு விளங்க வைக்கும் போதும் மிக மெதுவான உடலசைவை மேற்கொள்வார்கள். ஆனால் ஆரோபிக்ஸ் பயிற்சியில் இடைவெளியற்ற ஒரு நொடிகூட நில்லாது பயிற்சி பெறும் சூழல் உண்டு.

பரதம் பயின்ற பெரும்பாலானோர் திருமணத்துக்குப் பின் பயிற்சியைக் கை விட்டதன் காரணமாக உடல் மிகவும் பருத்துக் காணப் படுகின்றனர் என்பது உண்மை இப்பயிற்சி பெறுவோர் மீண்டும் பொலிவுடன் காணப்படு வர்.

# நியூரோதெரபி

## மருந்தில்லா மருத்துவம்

இறைவனின் படைப்பில் மானுட தேகம் மகத்துவமானதும், அற்புதமானதும் ஆகும். இயற்கைக்கு புறம்பான வாழ்க்கை முறையாலும், உணவு முறையாலும் உடலில் நோய்களை நாமே உருவாக்கிக் கொள்கிறோம். உடலில் வெப்ப சமன்பாட்டில் ஏற்படும் தேக்கங்களே நோய் என்பதாகும். அதிக வெப்பத் தேக்கம் "அல்சர்" என்ற உஷ்ண



நோயையும், குளிர்த்தேக்கம் அதிகமானால் "கான்சர்" என்று சொல் லக் கூடிய புற்று நோயையும் ஏற்படுத்துகிறது என்று மருத்துவம் கூறுகிறது. ஆனால் இயற்கையாகவே பாதிக்கப்பட்ட நோய்களுக்கு தகுந்த மருந்துகள் நம் உடலில் ஆங்காங்கே சுரப்பிகள் மூலமாக உற்பத்தி செய்து குணப்படுத்தலாம். சுரப்பியின் செயல்திறன் குறைந்து நோய் ஏற்படும் போது "நியூரோதெரபி" என்ற மருத்துவத்தில் சுரப்பியைத் தூண்டி இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தி நன்கு செயல்பட வைத்தால் நோய் குணமாகும். மருந்து, மாத்திரை தேவையில்லை. பக்கவிளைவுகளும் இல்லை. அதாவது, உடலில் இயற்கையிலேயே சுரக்கக் கூடிய அமிலங்கள் சமச்சீர் வெப்பநிலை குறையும்போது அமிலத் தன்மை இழக்கும் வேளையில் அவைகளை சுரக்க வைப்பதே இம் மருத்துவம் என்கிறார் மதுரையில் சிறப்பாக சேவை செய்து வரும் Dr.K.B. ஆனந்தகுமார் L.M.N.T.N.D அவர் அளித்த பேட்டியிலிருந்து,

◆ *"நியூரோதெரபி" என்ற மருத்துவத்தால் நீங்கள் எந்தெந்த நோய்களுக்கு சிகிச்சை அளிக்கிறீர்கள்?*

பொதுவாகவே மனிதனுக்கு ஏற்படுகின்ற அனைத்து நோய்களையும் குணப்படுத்துகிறோம். ஆஸ்துமா, அல்சர், முதுகு, கீழ்மூட்டு வலி, பக்கவாதம், திக்குவாய், ஹீமோஃபீலியா வியாதிகளுக்கு சிகிச்சை அளிக்கின்றோம். குறிப்பாக மனவளர்ச்சி குறைவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியூரோதெரபி மருத்துவம் சிறப்பாய் அமைகிறது. பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் தீராதநோய்களுக்கு எந்த அறுவைச் சிகிச்சையும் இன்றி குணப்படுத்துதலே இம் மருத்துவத்தின் சிறப்பு

◆ *சிலருக்கு மூட்டுவலியின் பாதிப்பு அதிகமாக உள்ளதே.அது எதனால் ஏற்படுகிறது? அது குணமாக உங்கள் மருத்துவத்தில் எவ்வாறான சிகிச்சையை மேற் கொள்கிறீர்கள்?*

உடலின் எடை அதிகமாவதாலும் காலுக்கு தகுந்த பயிற்சி தராததாலும் ஏற்படுகிறது. இது "ஸ்பைனோவியல்" என்ற குறைபாடு. எந்த ஒரு மருந்தும் இன்றி உடலின் குறிப்பிட்ட பாகத்தை அழுத்தி சுரப்பிகளைத் தூண்டி "ஸ்பைனோவியல்" என்பதை சுரக்கச் செய்து குணப்படுத்தி விடுகிறோம். மறுபடியும் கூறுகிறேன். உடலில் சமச்சீர் வெப்பநிலை மாறுபடும் போது ஏற்படும் குறைகளை சுரப்பிகளைத் தூண்டி இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தி செயல்படுத்துவதினால் உடலில் குறைபாடுள்ள பகுதியில் அதற்கேற்ற அமிலம் சுரந்து எதிர்ப்பு சக்திகளை கூட்டச் செய்து குணப்படுத்துவதே நியூரோதெரபி.

◆ *உடலில் எந்தெந்த அமிலம் குறைவதினால் என்ன மாதிரியான நோய் வருகிறது எனக் கூறுங்கள்?*

பெரும்பாலும் உடல் உஷ்ணத்தால் அஜீரணக்கோளாறினால் "அல்சர்" ஏற்படுகிறது. நரம்பு தளர்ச்சி, உடல் நடுக்கம், வாதம், வலிப்பு, கால் கைகளில் நரம்புப் பிடிப்பு இவ்வாறானவை மூளையில் உள்ள "டோபோமைன்" என்பதின் குறைபாடே பேங்க்கிரியாஸில்" குறைபாடு உண்டாவதினாலும் இவ்வியாதிகள் தோன்றுகின்றன. "இன்சுலின் குறைபாட்டால் சர்க்கரை நோயும், க்ஷைமஸ்" குறைபாட்டால் கான்சர் என்ற புற்று நோயும் ஏற்படுகிறது.

◆ *உடலின் முக்கிய பாகங்களை அழுத்துவதினால் நோய்த் தன்மை குறைகிறது என்கிறீர்களே? எந்தெந்த பாகங்களை அழுத்துவதினால் நோய்கள் வராதிருக்கும் என தெரிந்துகொள்ளலாமா?*



பொதுவாக மனிதன் உடலுக்கேற்ற வீரியசக்தி உடலுக்குள்ளே இருப்பதினால் நோய்கள் அவ்வளவான பாதிப்பை உண்டு பண்ணாது. ஆனால் சில உணவுப் பழக்கங்களாலும், தவறான நடவடிக்கைகளினாலும் ஏற்படுகின்ற வெப்பக் குறைபாடினால் எதிர்ப்பு சக்தி குறைந்து நோய் வருகிறது. உடலில் காரத் தன்மை, புளிப் புத்தன்மை குறைந்தாலே அதிகப்படியான நோயிலிருந்து தப்பலாம். இதனாலே இந்த சிசிச்சை மேற்கொள்வோர், மது, மாமிசம், புளிப்பு, தயிர், புகையிலை பயன்படுத்தக் கூடாது என்கிறோம். நோய் வராதிருக்க "நியூரோ தெரபி" மருத்து வத்தில் சில வழி முறைகளை மேற்கொள்ளச் சொல்கிறது. தினமும் உடற்பயிற்சி செய்வது போல் செய்யலாம். (உடன் ஒருவர் இருத்தல் அவசியம்).

**செய்முறைகள்**

1. இடதுபக்கமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டு இடதுகாலை நேராக நீட்டி வைக்கவும். வலது காலை குறுக்காக மடித்து வைக்கவும்.

இடதுகால் மூட்டிற்கு மேல் 1 நிமிடம் அழுத்தவும். இவ்வாறு தொடர்ந்து வரும் நாட்களில் செய்து வருவதினால் உடலில் காரத்தன்மை குறையும்.

2. வலது பக்கமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டு வலதுகாலை நேராக நீட்டி வைத்து இடது காலை குறுக்காக மடித்து வைக்கவும். வலக்கால் மூட்டிற்கு மேல் அழுத்தவும். இந்த வழிமுறை உடல் வலியைக் குறைப்பதற்கும் உடலில் புளிப்புத் தன்மையைக் குறைக்க வும் உதவுகிறது.



3. பக்கவாத நோய், இருதயக்கோளாறு போன்றவற்றில் இவ் வழிமுறையில் ஏதேனும் வழி உண்டெனில் கூறுங்கள்?

வழி உண்டு. இடது பக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டு இரண்டு கால்களையும் மார்புக்கு நேரே குறுக்காக வைத்துப் படுக்கவும். வலதுகால் தொடை எலும்புமுடியும் இடத்தில் பந்துகிண்ண மூட்டைச் சுற்றி கை, கால்களால் உள்நோக்கி அழுத்தவும். அதனால் உடலில் விற்றமின் "B" அதிகரித்து "போலிக் அசிட்" என்பது சுரந்து நோயிலிருந்து தப்ப வைக்கும்.

*கண், காது இவைகளில் ஏற்படும் குறைகள் நமக்கு வராதிருக்க வழிமுறை உண்டெனில் கூறுங்கள்?*

"போலிக் அசிட்" சுரக்க செய்த பயிற்சியின் போது வலது காலை பயன்படுத்தியதுபோல் அவ்வாறு செய்து வலதுகாலிற்கு பதில் இடது கால் தொடை எலும்பு முடியும் இடத்தில் பந்து கிண்ண மூட்டை அழுத்த வேண்டும். அவ்வாறு நித்தம் செய்து வரும்போது உடல் விற்றமின் B12 அதி கரித்து நரம்பு சம்பந்தப்பட்ட குறைபாடுகள் உடனே சீராகும்.




வூஸ்க் நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட தொழிற் பயிற்சிகளை நிறைவு செய்த பயிலுநர்களுக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மங்கல விளக்கேற்றுவதையும் வூஸ்க் நிறுவனத்தின் வடபிராந்திய பிரதி வெளிக்களப் பணிப்பாளர். வே.ஜெயராஜசிங்கம் தலைமையுரையாற்றுவதையும் முதல் இரு படங்களிலும், பயிற்சியை நிறைவு செய்த மாணவி ஒருவருக்கு அரச அதிபர் உபகரணம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் மற்றைய படங்களிலும் காணலாம். (படங்கள்:அருண்)

# இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் மைக்கெல் வோகன் திடீர் இராஜினாமா

## புதிய தலைவராக பீற்றர்சன் தெரிவு



(லண்டன்)

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் பதவியிலிருந்து மைக்கெல் வோகன் விலகினார்.

இங்கிலாந்து ஒருநாள் அணியின் தலைவரான கொலிங்வூட்டும் தனது பதவியை இராஜினாமாச் செய்திருக்கிறார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்று வரும் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து மோசமான தோல்வியை சந்தித்துள்ளது.


மூன்றாவது டெஸ்டில் தோற்ற இங்கிலாந்து தொடரை 2:0 என இழந்துள்ளது.

இத் தோல்வியை அடுத்து அணித் தலைவர் மைக்கெல் வோகன் தமது பதவியை இராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ளார்.

ஐந்து ஆண்டு காலம் இங்கிலாந்து அணியின் தலைவராக இருந்த அவர்; இந்த முடிபு மிகவும் கஷ்டமானதாக இருந்ததாக கூறியுள்ளார்.

இதேபோல இங்கிலாந்து ஒருநாள் போட்டி அணியின் தலைவர் கொலிங்வூட்டும் தனத பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இதனையடுத்து இளம் சகலதுறை வீரர்



கெவின் பீற்றர்சன் இங்கிலாந்து அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (5)

## துளிகள்

### கும்ளே சாதனை

நேற்றுமுன்தினம் இலங்கை வீரர் முரளிதரனை தனது பந்தில் தானே பிடியெடுத்து ஆட்டமிழக்கச் செய்த கும்ளே டெஸ்டில் அதிக முறை கோட் அன்ட் போல்ட் முறையில் விக்கெட் வீழ்த்தியவர் என்ற சாதனையை (34 முறை) படைத்தார். இரண்டாவது இடத்தில் முரளிதரன் (33 முறை) இருக்கிறார்.

### கங்குலி ஆயிரம்

நேற்று முன்தினம் 5-வது ஓட்டத்தை எடுத்தபோது இந்திய வீரர் கங்குலி, இலங்கைக்கு எதிரான டெஸ்டில் ஆயிரம் ஓட்டங்களைக் கடக்கும் 3-வது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார்.

இவர் 13 டெஸ்டில் 3 சதம், 4 அரைச் சதம் உட்பட 1011 ஓட்டங்கள் எடுத்துள்ளார். முதல் இரண்டு இடங்களை சச்சின் (1388), அசார் (1215) பிடித்துள்ளனர்.

★ நேற்று முன்தினம் ஹர்பஜன் அன்னிய மண்ணில் முதல் முறையாக 10 விக்கெட் வீழ்த்தினார். இதுதான் இலங்கை மண்ணில் இந்திய பந்துவீச்சாளர் ஒருவரின் சிறப்பான பந்துவீச்சு.

★ காலி மைதானத்தில் இந்திய அணி நேற்று தனது முதல் வெற்றியை பதிவு செய்தது. நேற்று முன்தினம் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 136 ஓட்டங்களுக்கு சுருண்ட இலங்கை அணி காலி மைதானத்தில் குறைந்த பட்ச ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்தது.

★ முன்னதாக அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 2003இல் நடந்த டெஸ்டில் 154 ஓட்டங்கள் எடுத்ததே குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது. (5)

# ஏழு பதக்கங்களை வெல்ல எதிர்பார்க்கும் மைக்கல் பெல்ப்ஸ்

(பீஜிங்)

எதிர்வரும் பீஜிங் ஒலிம்பிக்கில் அமெரிக்க நீச்சல் சம்பியனான மைக்கல் பெல்ப்ஸ் 8 பதக்கங்களை வெல்ல எதிர்பார்க்கிறார்.

இதற்கு முன்னர் நீச்சல் சம்பியனான மார்க் ஸ்பிட்ஸின் சாதனையை முறியடிக்க இவர் எதிர்பார்க்கிறார்.

மார்க் ஸ்பிட்ஸ் 1972இல் 100 மீற்றர் ப்ரீஸ் ஓடைல், 200 மீற்றர் ப்ரீஸ்டைல், 100 மீற்றர் பட்டர் ப்ளை 200 மீற்றர் பட்டர் ப்ளை 4X100 மீற்றர் ப்ரீஸ்டைல், 4X200 ப்ரீஸ்டைல், 4X100 மெட்லி ஆகிய 7 போட்டிகளில் வெற்றி பெற்று சாதனையை ஏற்படுத்தினார்.

இதேவேளை மைக்கல் பெல்ப்ஸால் இந்த சாதனையை முறியடிப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாக அவுஸ்திரேலியாவின் 1500 மீற்றர் நீச்சல் சம்பியனான கிராண்ட் ஹெக்கட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எனினும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மற்றொரு சம்பியன்ான இயன் தோப்பே அதற்கு நேர்மாறான கருத்தை தெரிவித்துள்ளார்.

பீஜிங் ஒலிம்பிக்கில் பெல்ப்ஸால் எட்டுத் தங்கப்பதக்கங்களை வெல்ல முடியாது என தோப்பே கூறுகின்றார்.

மைக்கல் பெல்ப்ஸ் ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் ஸ்பிட்ஸின் சாதனையை முறியடிக்க இருந்தார். எனினும் துரதிர்ஷ்டவசமாக அந்த வாய்ப்பு கை நழுவிச் சென்றது.

அவர் 2004 ஒலிம்பிக்கில் 6 தங்கப்பதக்கங்களையும் 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்றார்.

பீஜிங் ஒலிம்பிக்கிலும் அதேபோட்டிகளில் பெல்ப்ஸ் பங்கு பற்றவுள்ளார்.

பெல்ப்ஸின் முயற்சி குறித்து அவுஸ்திரேலிய தலைமை நீச்சல், பயிற்றுவிப்பாளரும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நட்சத்திரம் அவரது குறிக்கோளை எட்டுவதற்கான சாத்தியங்கள் உள்ளபோதும் மெட்டி ரிலே அவருக்கு சற்று சவாலாக இருக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய வீரரான கிராண்ட் ஹெக்கட்டும் சாதனையொன்றை நிலைநாட்ட எதிர்பார்க்கிறார்.

இம்முறையும் அவர் 1500 மீற்றர் நீச்சல் போட்டியில் வெற்றி பெற எதிர்பார்க்கிறார்.

இம்முறையும் அவர் வெற்றி பெற்றால் 1500 மீற்றர் நீச்சல் போட்டியில் தொடர்ச்சியாக 3 ஒலிம்பிக்கில் வெற்றி பெற்ற வீரர் என்ற சாதனையை நிலைநாட்டியவர் ஆகின்றார்.




# அமெரிக்க அணியின் தங்கப்பதக்கம் எட்டு ஆண்டுகளின் பின்னர் பறிப்பு

2000ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான 400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் அமெரிக்க அணி தங்கப்பதக்கம் வென்றது.

பதக்கம் வென்ற அணியில் இடம் பிடித்த வீரர்களில் அன்டோனியா பெட்டிக்குரோவ் உட்பட 3 பேர் ஊக்க மருந்து பயன்படுத்தியது தெரியவந்தது.

அமெரிக்க பயிற்சியாளர் டெவோர் கிரகாம் ஊக்க மருந்து விவகாரத்தில் சிக்கியதைத்தொடர்ந்து நடந்த விசாரணையில் இந்த சம்பவம் வெளிப்பட்டது.

இது தொடர்பாக விளையாட்டு நடுவர் மன்றத்தில் வழக்கு நடந்தால் பதக்கம் பறிக்கப்படாமல் இருந்தது.

தற்போது பதக்கம் பறிக்கப்பட்டுள்ளது. கடந்த 8 மாதத்தில் அமெரிக்க தடகள அணிகளிடம் இருந்து பறிக்கப்படும் 4-வது தங்கப்பதக்கம் இதுவாகும்.

ஏற்கனவே மரியன் ஜோன்ஸிடம் இருந்து 3 தங்கம், 2வெண்கலப் பதக்கம் பறிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பறிக்கப்பட்ட தங்கப்பதக்கம், 2-வது இடம் பிடித்த நைஜீரியாவுக்கு வழங்கப்படும்.

# சீன ஒலிம்பிக் குழாமில் வயது குறைவானவர்களுக்கு வாய்ப்பு

(பீஜிங்)

கனிஷ்ட விளையாட்டுப் போட்டிகளில் வயதை குறைத்துக் காட்டி சிரேஷ்ட வீரர்கள் கலந்து கொள்வதாக சர்ச்சை எழுவது வாடிக்கை.

பீஜிங் ஒலிம்பிக் போட்டியிலும் இது போன்ற சர்ச்சை எழுந்துள்ளது.

சீன குழாமில் நிர்ணயிக்கப்பட்ட வயது பூர்த்தியடையாத வீரர் வீராங்கனைகளுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதால் பிரச்சினை ஏற்பட்டுள்ளதுதான் வேடிக்கை.

ஒலிம்பிக் விதி முறைகளின்படி போட்டியில் கலந்து கொள்ள 16 வயது நிரம்பியிருக்கவேண்டும்.

ஆனால் சீன ஜிம்னாஸ்டிக் அணியில் இடம்பெற்றுள்ள இரண்டு வீராங்கனைகளுக்கு 14 வயது தான் ஆகிறதாம்.

தேசிய சம்பியன்களுக்கே அதிர்ச்சியளித்த இந்தச் சிறுமிகளின் அபார திறமையால் அசந்தபோன ஒலிம்பிக் தேர்வுக் குழு சீனக் குழாமில் அவர்களுக்கு இடம் கொடுத்து விட்டது.

இது குறித்து சீனப் பத்திரிகைகளும் இணையத்தளங்களும் பெரிய அளவில் செய்தி வெளியிட்டது தப்பாகியுள்ளது.

பதக்க வேட்டையில் சீனாவுடன் போட்டி போடும் அமெரிக்க அணி நிர்வாகிகள் சம்மந்தப்பட்ட வீராங்கனைகள் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

வயது குறைவா? அதிகமா? என்பது

**பாலா**

பிரச்சினை அல்ல. விதிமுறை மீறப்பட்டிருக்கிறது என்பது மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது அமெரிக்காவின் வாதம்.

ஜிம்னாஸ்டிக் மட்டுமல்லாது வேறு சில விளையாட்டுக்களிலும் குறைவான வயது வீரர் வீராங்கனைகளை சீனா களமிறக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

கரணம் தப்பினால் மரணம் என்ற அபாயத்தையும் பொருட்படுத்தாமல் அந்தரத்தில் பறந்து ஜிம்னாஸ்டிக் சாகசம் நடத்தும் அந்தச் சிறுமிகள் தங்களுக்கு ஒலிம்பிக் வாய்ப்பு கிடைக்குமா? கிடைக்காதா? என்ற கேள்வியால் குழம்பிப்போயுள்ளது தான் பரிதாபம்.

# திருகோணமலை உப்புவெளியில் ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள பெரியகுளம் பகுதியில் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பல கடந்த முதலாம் திகதி மாலை விசேட பொலிஸ் குழு ஒன்றினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் மூன்று கிளைமோர்க் குண்டுகள், ரி.-56 துப்பாக்கிக்கான ரவைகள் 50, ஆர்.பி.ஜி. துப்பாக்கி ரவைகள் மூன்று, ஜே.ஆர்.ரக கைக் குண்டுகள் இரண்டு உட்பட இன்னும் பல வகைகளும் அடங்குவதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி ஆயுத வகைகள் பரல் ஒன்றினுள் போடப்பட்டுக் காட்டில் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததுடன் திருகோணமலையிலுள்ள ஏதேனும் பகுதியிலிருந்து அவை கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலைப் பொலிஸ் அதிகாரி வாஸ் குணவர்த்தனவின் வழிநடத்தலில் விசேட பொலிஸ் குழுவினர் இது குறித்து விசாரணைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். (அ-6)

## இலங்கை வங்கியின் 69-வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 69-வது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 8.30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ச)

# திருமண வைபவத்திற்குச் சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் பாழடைந்த கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் பண்டத்தரிப்பு பெரியவிளானைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான சக்காரியஸ் யேசுதாஸன் (வயது - 57) என்ற குடும்பஸ்தரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வீட்டிலிருந்து திருமண வைபவம் ஒன்றுக்குச் செல்வதாக உறவினர்களிடம் கூறிச் சென்ற பிரஸ்தாப குடும்பஸ்தரை நேற்று முன்தினம் வரை காணவில்லை எனவும் அவரைத் தேடிச் சென்றபோதே வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள முள்ளையடி என்ற பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆறு மாதங்களுக்கு முன்பாக வெளிநாட்டிலிருந்து வந்த குறித்த குடும்பஸ்தர் அணிந்திருந்த பெறுமதி வாய்ந்த தங்க நகைகள், பணம் என்பவற்றையும் காணவில்லை என உறவினர்களால் விசாரணைகளில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் அணிந்திருந்த சேட்டைக் காணவில்லை எனவும் அவரின் சாரம் கிணற்றுக்கு வெளியே வீசப்பட்டுக் காணப்பட்டதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரின் சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினிதேவி இளங்கோவன்,

பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு இளவாலைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## கோத்தபாய, சரத் பொன்...

மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் தமிழருக்கு எதிரான கடத்தல்கள், சித்திரவதைகள், படுகொலைகள் ஆகியவற்றை மேற்கொண்டு வரும் அரசில் அங்கம் வகிக்கும் அமெரிக்கக் குடியுரிமை கொண்ட அந் நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோருக்கு எதிராக அமெரிக்கா, தனது நாட்டுக் குடிமகன்கள் என்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் அந் நாட்டு ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கக் குடிமகன். அவருக்கு கலிபோர்னியாவின் டிமாஸ் பகுதியில் வீடு உண்டு என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இன்னொரு சகோதரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவும் அமெரிக்கக் குடிமகன். அவருக்கு கலிபோர்னியா பொன்டேனாப் பகுதியில் வீடு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அமெரிக்காவில் வசிக்கும் தகுதியளிக்கக் கூடிய கீறின் கார்ட் உடையவர். அவருக்கு ஒக்கலாமாப் பகுதியில் வீடு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சேர்பியாவின் மிலோசவிக், பொஸ்னியாவின் கராடிக், சூடானின் ஓமர் பசீர் ஆகியோர் மேற்கொண்ட-அல்லது அதனைவிட பாரதூரமான-இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் இலங்கை அரசில் அங்கம் வகிக்கும் மூன்று அமெரிக்கக் குடிமகன்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க இனசுத்திகரிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு தயாராகி வருகின்றது.

இவ் விடயத்தைத் தக்க ஆதாரங்களுடன் அமெரிக்க அரசின் பார்வைக்குக் கொண்டு வருவதற்கு அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் புரூஸ் பெய்னின் தலைமையில் இனசுத்திகரிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

போர்க் குற்றங்களைப் புரியும் அமெரிக்கக் குடிமகன்களையும் குடிமகன் அல்லாதவர்களையும் கூட அமெரிக்கச் சட்டம் கடுமையாகத் தண்டிக்கின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## சார்க்...

றோகித போகொல்லாகம தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முடிபடைந்த 15-வது சார்க் உச்சி மாநாட்டைத் தொடர்ந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் குழு அறை ஏ யில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். சார்க் அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு 15-வது சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட 8 நாடுகளின் தலைவர்களும் இணக்கம் கண்டுள்ளனர்.

இதற்கான உடன்படிக்கையில் வெளிவிவகார அமைச்சர்களும் நேபாளத்தின் நிதியமைச்சரும் கைச்சாத்திட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## பாலமோட்டை...

வரையிலான தாக்குதலில் 9 படையினர் கொல்லப்பட்டனர். 11 பேர் காயமடைந்தனர் என விடுதலைப்புலிகள் நேற்றிரவு தெரிவித்துள்ளனர். (ச-5)

## சார்க் செலவை ஈடு செய்ய...

வன்மையாகக் கண்டிப்பதுடன் பலத்த எதிர்ப்பினையும் தெரிவித்துக் கொள்கின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையினால் அறிமுகப்படுத்தியிருக்கும் மூன்று வரித் திட்டங்கள் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக சபையின் தலைவர் உதயகம்மன்பில் தெரிவிக்கின்றார்.

இதன்படி சகல மோட்டார் வாகனங்களுக்கும் வருடம் ஒன்றுக்கு ரூபாய் 200 முதல் 800 ரூபாய் வரையில் அறவிடப்படவுள்ளது. அதேபோல் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு இரண்டு ரூபாய் என்ற அடிப்படையிலும் மற்றும் சி.எவ்.எல்.தவிர்ந்த ஏனைய 40 வோல்டேஜுக்கு அதிகமான மின்குமிழ் ஒன்றுக்கு 3 ரூபாய் வீதமும் அறவிடப்படவுள்ளது.

இந்த வரிகள் சுற்றாடல் பாதுகாப்புக்கென அறவிடப்படுவதாக சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது. (ச-5)

## வடக்கில் பல பகுதிகளில்...

இது குறித்துப் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்ததாவது,

நேற்று முன்தினம் முழுவதும் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் வடக்கின் பல்வேறு இடங்களில் மோதல்கள் இடம்பெற்றன.

இம் மோதல்களின்போது படையினர் மேற்கொண்ட தாக்குதல்களினால் விடுதலைப்புலிகளுக்குப் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன.

மன்னார் வெள்ளாங்குளம் வடக்குப் பகுதியில் இரு தரப்பினர்களுக்குமிடையில் நேற்றுக் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதன்போது 26 விடுதலைப்புலி உறுப்பினர்களும் 5 இராணுவ வீரர்களும் பலியாகியதுடன் மேலும் 11 பேர் காயமடைந்ததாகவும் அந்த ஊடகத் தகவல் மையம் தெரிவித்திருக்கின்றது.

வெள்ளாங்குளத்தில் நிலை கொண்டிருக்கின்ற இராணுவத்தின் நிலைகள் மீது இரண்டு தடவைகள் விடுதலைப்புலிகள் வலிந்த தாக்குதல் நடத்தியதாகவும் இந்தத் தாக்குதல்கள் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டதாகவும் இதன்போதே இரண்டு தரப்பினர்களுக்குமிடையில் கடுமையான மோதல்கள் இடம்பெற்றதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வவுனியா, வெலிஓயா போன்ற பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் 10 விடுதலைப் புலிகளும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது. (ச)


வலம்புரி நடத்தும் ஐந்தாம் தர
புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு

முற்றிலும் இலவசம்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துடன் இணைந்து
கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன்
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.
நடைபெறும் கருத்தரங்கு

காலம் :- 05 - 06.08.2008 காலை 9 மணி

இடங்கள் :-

* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
* ஜோன்.பொஸ்கோ பாடசாலை
* திருக்குடும்ப கன்னியர் மடம்
* சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்
* கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
* வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்
* யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
* யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
* பெரியபுலம் மகா வித்தியாலயம்
* சென்.பெனடிக்ஸ் வித்தியாலயம்
* கல்வியங்காடு இ.த.க.பாடசாலை
* நாயன்மார்கட்டு முத்துத்தம்பி வித்தி.
* கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
* கோண்டாவில் இந்து மகா வித்தி.
* கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்

வலிகாமம் கல்வி வலயத்துடன் இணைந்து
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸின் அனுசரணையுடன்
நடைபெறும் கருத்தரங்கு
ஸ்ரீலங்காஇன்ஷுவரன்ஸ்

காலம் :- 05.08.2008 காலை 9 மணி
இடம் :- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

இக் கருத்தரங்கில் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுக

ஏனைய கல்வி வலயங்களிலும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்படும்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.